Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு+II

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விலை ரூபா 10.00

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 23 ஹிஜ்ரி 1428 துல்கஜ் 06 (07.01.2006) சனிக்கிழமை இதழ் 99

MANOJ AIR TOURS (PVT) LTD.

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038

# கையை விரித்தது அமெரிக்கா!

## உடுவிலில் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம் —

உடுவில்- ஆலடிப்பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம் பவத்தில் உடுவில் - ஆலடிப் பகுதி யைச் சேர்ந்த தங்கராஜன் பிரதீஸ் குமார் (டயஸ் வயது 28) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

உடுவில் - ஆலடிச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனது வெல்டிங் கராஜ்ஜுக்கு இவர் சென்றதாகவும் இரவு 8.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இனந்தெரியாத நபர்கள் காவலாளியை சத்தம் போடவேண்டாம் என பயமுறுத்தி (12 ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவின் விஜயம் தோல்வி

வொஷிங்டன் —

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி இலங்கை வெளிவிவகார அமைச்சர் மாங்கள சமரவீர விடுத்த வேண்டுகோள் தொடர்பாக அமெரிக்கா எந்த உறுதிமொழியையும் வழங்க மறுத்துவிட்டது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொண்டோ லீசா ரைஸை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியபோதே புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மங்கள சமரவீர கோரியிருந்தார்.


ஆனால், இலங்கைக்கு உதவுவது தொடர்பாகவோ, புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பது குறித்தோ அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் உறுதிமொழி எதனையும் வழங்க மறுத்துவிட்டார். இதனால் மங்கள சமரவீரவின் அமெரிக்க விஜயம் தோல்வியடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(02 ஆம் பக்கம் பார்க்க)



# போரை எதிர்கொள்வதற்கு படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும்!

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்



கொழும்பு —

நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு போர்ச் சூழலையும் எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் முப்படைகளும் பலமான நிலையில் எப்போதும் தயரர் நிலையில் இருக்கவேண்டுமென பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்

பட்டலந்த இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் 8 ஆவது பட்டமளிப்பு விழா நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது - நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்று பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கையில் -

இராணுவத்தினர் பலமான நிலையில் இருக்கவேண்டும் என்றால் அது தனியே துப்பாக்கிகள், டாங்கிகள், நவீன போராயுதங்களைக் கொண்டதாக மட்டுமன்றி ஆளணி வளத்திலும்தான்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் வெட்டிக்கொலை

வடமராட்சி —

பருத்தித்துறை நகர சபையில் பணியாற்றும் சிற்றூழியர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

தும்பளை-பருத்தித்துறையைச் சேர்ந்த தவேந்தரன் மதன் (வயது-28) என்ற இளைஞர் பருத்தித்துறை நகர சபையில் சிற்றூழியராகக் கடமையாற்றி வந்தார்.

நேற்றுமுன்தினம் காலை வேலைக்குச் சென்ற இவர் இரவு வீடு திரும்பவில்லை. இந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் இவரது சடலம் 13 வெட்டுக் காயங்களுடன் தும்பளை மணல் வீதியில் உள்ள பழைய நகர சபைக்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து பருத்தித்துறைப் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து- பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அரியநாயகம் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு பிரேத (12 ஆம் பக்கம் பார்க்க)

## கரணவாய் வாசி

## தமிழர் மீதான

## கரணவாய் வாசி லண்டனில் கொலை

லண்டன் —

வடமராட்சியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் லண்டனில் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கரணவாய் கிழக்கு - கரவெட்டியைச் சேர்ந்த 44 வயதான சுப்பிரமணியம் சிவகுமார் என்பவரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று லண்டன் விம்பிள்டனில் இடம்பெற்றது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், விம்பிள்டனில் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்தி வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர் மீதான கெடுபிடிகளை கண்டித்து கொழும்பு நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு —

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொழும்பு நகரில் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படுவதைக் கண்டித்து கொழும்பு நகரில் நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் கிராண்ட்பாஸ் சந்தியில் இடம்பெற்றது.

மேலக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு அமைப்புக்களும் சிங்கள, தமிழ் அரசியல் கட்சி தலைவர்களும் கலந்துகொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் சுலோக அட்டைகளை தாங்கியிருந்ததுடன் பொலிஸாரின் அராஜகங்களை நிறுத்துமாறும், அவசரகாலச் சட்டத்தை அகற்றுமாறும் கோசம் [illegible]னர்.

ஒரு மணி நேரம் நீடித்த இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அரசியல் கட்சித் தலைவர்கள் உரை நிகழ்த்தினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான (12 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்கள் கைதாவதைத் தடுக்க இந்திய அரசு மூலம் அழுத்தம்!

### கொடுக்கவிருக்கிறார் கலைஞர் கருணாநிதி




கொழும்பு —

கொழும்பிலும், மலையகப் பகுதிகளிலும் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் கைது செய்யப்படுவது தொடர்பாக இந்திய அரசாங்கத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளதாக- திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதிக்கே பாதுகாப்பை வழங்கமுடியாத நிலையில் படையினர்!

### ஓமந்தை செல்லமுடியாமல் திரும்பினார் பொன்சேகா

வவுனியா —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா ஓமந்தை செல்வதற்குப் படையினர் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்காததால் - அவர் முன்னரங்க நிலைகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டது.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று வவுனியாவுக்குச் சென்றார்.

ஹெலியில் அங்கு சென்ற இராணுவத் தளபதி சரத் பொன்சேகா - வன்னி இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உபாலி எதிரிசிங்கவால் வரவேற்கப்பட்டார்.

தொடர்ந்து வன்னியிலுள்ள முக்கிய இராணுவ அதிகாரிகளுடன் ஒருமணி நேரத்துக்கு அதிகமாக சரத் பொன்சேகா ஆலோசனை நடத்தினார்.

வன்னி இராணுவத்தினரின் தற்போதைய பிரச்சினைகள், பாதுகாப்பு நிலவரங்கள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. வன்னி இராணுவத் தலைமையகமான ஜோசப் இராணுவ முகாமில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

வன்னி இராணுவத் தளபதிகளைச் சந்தித்த பின்னர் ஓமந்தைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கையை விரித்தது! அமெரிக்கா...

அமெரிக்காவுக்கு மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர - நேற்றுமுன்தினம் அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டோ லீசா ரைஸைச் சந்தித்து இலங்கை அரசின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தொடர்பாக விளக்கினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமான தீர்வொன்றைக் காண்பதற்கு அரசாங்கம் உறுதியாகவுள்ளது. அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் 28 அரசியல் கட்சிகளின் ஆதரவை ஜனாதிபதி ராஜபக்ஷ பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இனப்பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் தென்பகுதியில் கட்சிகளிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்களை நடந்திவருகிறார்.

போர்நிறுத்தத்தை உறுதியான முறையில் அமுல்படுத்துவதற்கும், பேச்சுவார்த்தைமூலம் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கும் நடந்துமுடிந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி மீளவும் அழைப்பு விடுத்துள்ளார் எனத் தெரிவித்த அமைச்சர் - இலங்கையின் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா காட்டிவரும் ஆதரவுக்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் செயற்திட்டங்களை அமெரிக்க வெளியுறவுச் செயலர் விரிவாக கேட்டறிந்தார்.

இதேவேளை, அமைச்சர் மங்கள சமரவீர அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்கள அடிநிலைச் செயலாளர் நிக்கலஸ் பேனஸ், தென்னாசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் கிறிஸ்ரினா றொக்கா ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிகாகார, அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேனாட் திலகரட்ண, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர், ஜயந்த தனபால, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ன ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

அமெரிக்க வெளியுறவுச் செயலருடனான சந்திப்பின் பின்னர் ஏ.பி. ஏ.எவ்.பி. மற்றும் பி.பி.சி. ஆகிய சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு பேட்டியளித்த மங்கள சமரவீர -

அமெரிக்க வெளியுறவுச் செயலர் எமக்கு எந்தவிதமான உறுதிமொழிகளையும் வழங்கவில்லை. எனினும் வொஷிங்டனும் இலங்கைக்கான இணைத் தலைமை நாடுகளும் விடுதலைப் புலிகளைப் பேச்சு மேசைக்குக் கொண்டுவருவதற்கான ஆயத்தப் பணிகளை ஏற்கனவே செய்திருக்கின்றன.

நோர்வேயின் போர்நிறுத்த உடன்படிக்கையை மேலும் வலுவுள்ளதாக்குவதற்கு விடுதலைப் புலிகள் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்து பேச்சுக்குத் திரும்பவேண்டும். அரசாங்கம் போரை விரும்பவில்லை. போர் ஏற்படக்கூடிய சூழ்நிலை நிலவுவதாக கூறப்படுவதில் நான் உடன்படவில்லை. அரசின் அடுத்த திட்டம் பேச்சுவார்த்தையாகும்.

போர் எமது அரசாங்கத்தின் தெரிவல்ல என்ற உண்மையை நாம் விளங்கிக்கொண்டுள்ளோம்.

கடந்த வருடம் இலங்கையில் 6.2 வீதமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சுனாமிக்குப் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை 80 வீதமாக அதிகரித்துள்ளது. நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் நல்ல நிலையில் தென்படுகின்றன.

எனினும் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வன்செயல்கள் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி ராஜபக்ஷ பதவியேற்று ஏழு வாரங்களாகின்றன. இந்தக் காலப்பகுதியில் உடனடியாக பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு ஆறு பகிரங்க அழைப்புகளை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

நோர்வே தொடர்பாக இலங்கை மக்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளபோதும் நோர்வேயை தொடர்ந்து அனுசரணையாளர்கள் பதவியை வகிக்க ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். அத்துடன் கொழும்பில் அல்லது இலங்கையில் ஏதாவது ஓர் இடத்தில் அல்லது ஆசிய நாட்டில் பேச்சு நடாத்துவதற்கு தயார் என கூறுகின்ற அளவிற்கு நாம் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடித்துள்ளோம்.

விடுதலைப் புலிகள் 25 வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையிலேயே தொடர்ந்தும் உள்ளனர். தமிழ் நாடு ஒன்றுதான் தமது நிலைப்பாடு என அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, எமது அரசு அமைதிக்கான முயற்சியில் மிகுந்த நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படுகின்றது. எனவே விடுதலைப் புலிகளும் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே அவர்கள் உலகத்திற்குச் சொல்லால் மட்டுமல்ல செயலாலும் தம்மை நிரூபிக்கவேண்டும்.

அமெரிக்காவில் விடுதலைப் புலிகளுக்குத் தடை இருக்கின்றபோதும் அவர்களுக்கான நிதி சேகரிப்பு தொடர்ந்த வண்ணமுள்ளது. இது தொடர்பாக அமெரிக்க பயங்கரவாத தடுப்புப் பிரிவின் துணை இணைப்பாளரைச் சந்தித்து விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பது தொடர்பான ஆதாரங்களை தகவல்களை வழங்கியுள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கான அனுசணையாளர் பணியை வகிக்கும் நோர்வே இந்த மாத முடிவில் ஒரு புதிய விசேட தூதுவரையும் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பான முன்னேற்றத்திற்கான அனுசரணைப் பணிக்கு புதிய குழுவொன்றையும்நியமிக்குமெனத் தெரிவித்தார்.

# யாழ். அரசியற்துறை பொறுப்பாளருடன் கண்காணிப்புக்குழு சந்தித்துப் பேச்சு!

கிளிநொச்சி —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர், பொதுமக்கள் மீது மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்கள் அனைத்தையும் வெளிப்படுத்துவதுடன், போர்நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்த போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் லாஸ் பிளேய்மன் தலைமையிலான குழு நேற்று காலை பளையிலுள்ள அரசியற் துறையினரை சந்தித்தபோதே யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இவ்வாறு தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் ஊடக இணைப்பாளர் இ.இமையவனும் உடனிருந்தார்.

இந்தச் சந்திப்பில் அரசாங்கத்தினதும், படையதிகாரிகளினதும் ஒப்புதலுடன் படையினர் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதல்களில் 40 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

சுற்றிவளைப்புத் தேடுதல்களின் போது பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகிய 6 சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. 40 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு காணாமற்போயுள்ளனர்.

வடமராட்சி, மாதகல் ஆகிய இடங்களில் கடற்றொழிலுக்குச் செல்வதற்கு படையினர் தடை விதித்துள்ளனர். இதனால் மீனவ குடும்பங்கள் அன்றாட வாழ்வை நடத்தமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது தவிர படையினர் வர்த்தக நிலையங்கள், கூட்டுறவு நிலையங்கள் ஆகியவற்றின் களஞ்சியங்களை உடைத்து திருடிவருவதுடன், தளபாடங்களையும் சேதப்படுத்தி வருகின்றனர். வீடுகள் சோதனையிடப்படும் போது - அங்கு ஆயுதங்களை வைத்து விட்டு மக்கள்மீது பழிசுமத்தி அவர்களை தாழ்த்தி வருகின்றனர்.

படையினர் இத்தகைய நடவடிக்கைகள் - போர்நிறுத்த் உடன்படிக்கையை மீறும் செயலாகும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மக்கள் அச்சமடைந்து மரணப் பீதிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். படையினரின் இத்தகைய அடாவடித் தனங்களை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் வெளிப்படுத்துவது அவசியமாகும்.

அத்துடன், வடமராட்சி கடற்பரப்பில் மீனவர்கள்மீது இராணுவத்தினர் விதிக்கப்பட்டுள்ள தடைகள் குறித்தும் மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளதாக தெரியவருகிறது.

# காணாமற் போனவர்களில் 15 பேர் பற்றிய தகவல் இல்லை

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி திடுக்கிடும் தகவல்

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்ட 30 பேரில் 15 பேரின் நிலைமை தொடர்பாக தமக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் மட்டும் 30 பேர் காணாமற்போயுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணாமற்போனவர்கள் தொடர்பாக காங்கேசன்துறை இராணுவ தடுப்பு முகாமுக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி அங்கு தடுத்துவைக்கப்பட்டவர்கள் தொடர்பாக தடுப்பு முகாம் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இராணுவத்தினர் கைதுசெய்துள்ளதாக பெற்றோர்கள் செய்த முறைப்பாட்டில் நான்கு பேரைக் கைதுசெய்துள்ளதாக இராணுவத்தினர் ஒப்புக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 4 பேர் மன்னாருக்குச் சென்ற வேளை காணாமற்போனதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, காணாமற்போனவர்கள் 7 பேர் காங்கேசன்துறை இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், இவர்களைத் தாம் நேரில் சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தார்.

மார்க்கண்டு திருநீலன் (நெல்லாண்டை, தும்பளை), தர்மராசா குகதாஸ் (வயது 31 - தும்பளை), குபேந்திரன் நாகேந்திரன் (வயது 23 - கரவெட்டி), சோமசுந்தரம் சந்திரகுமார் (வயது 28 - பருத்தித்துறை), றோஜ் றொபோடி (வயது 41 - பருத்தித்துறை), ப.கமலக்கண்ணன் (வயது 25 - தும்பளை), பத்மநாதன் மனோகரன் (வயது 31 - பருத்தித்துறை) ஆகியோரே காங்கேசன்துறை இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், முறைப்பாடு செய்யப்பட்ட 30 பேரில் ஏனைய 15 பேர் பற்றிய தகவல் இதுவரை கிடைக்கவில்லை என்றும் காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டவர்களில் ஏனையவர்கள் பற்றிய தகவல்களை அறிய இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வீட்டமைப்புக் கடன் வழங்கலும் புதிய வீடுகள் கையளித்தலும்!

யாழ்ப்பாணம் —

உலக வங்கியின் வடக்கு - கிழக்கு மாகாண மீள் வீடமைப்புத் திட்டத்தின் 2006 ஆம் ஆண்டுக்கான முதற்கட்ட கொடுப்பனவு வழங்கும் நிகழ்வும் தொழிற்பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்குதல் மற்றும் 2005 இல் உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு யாழ்.செயலகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

காலை 9 மணிக்கு உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் தொழில்பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

காலை 9.30 மணிக்கு 2006 இல் யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப் படவுள்ள வீடுகளுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவு தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்படும்.

காலை 11 மணிக்கு உலக வங்கியின் நிதி உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் அமைக்கப்பட்ட 1635 வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவில் நெடுங்குளம் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு 11 மணிக்கும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கேணியடி கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு 12 மணிக்கும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வாதரவத்தையில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு பி.ப 2 மணிக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சாந்தை கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வு மாலை 4 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்பு புனர் நிர்மாண திட்ட யாழ்.செயலக திட்ட அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.


**விஞ்ஞானபீடம்**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் இரண்டாம் அரையாண்டின் நடுக்கூற்று விடுமுறை (mid - semester vacation) 17.01.2006 ஆம் திகதி முடிவடைகிறது. 18.01.2006 புதன்கிழமை கல்விச் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பமாகும். செயற்பாடுகள் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரை மட்டுப் படுத்தப்பட்டிருக்கும்.

- பதிவாளர் -

(சி/4997)



நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

ஆணை

எமது மகத்தான பொங்கல் வெளியீடு!

அல்டிமேட் ஸ்ரார் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த

பரமசிவன்

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



ஆறு

காட்சிகள்

10.30, 1.30, 4.30, 7.30, 10.30

நிறைஞ்சனாஸ் சங்கானை

அஜீத், கிரண், விவேக் மற்றும் பலர் நடித்த

வில்லன்

காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்

சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி, ஆனந்தராஜ் நடித்த

அய்யர் I.P.S



காட்சிகள்:-10.30, 2.00மட்டும் (பு.நேரம்)



HATTON NATIONAL BANK LIMITED HNB

**ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.கிளை**

**அடகுப் பொருட்களை மீட்டல்/விற்பனைக்கான அறிவித்தல்**

எமது கிளையில் அடகுசேவை வசதிபெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு ;

நீங்கள் பெற்ற அடகுக் கடனுக்குரிய சீட்டின் மறுபக்கத்தில் குறிப்பிட்ட விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய அடகு வைக்கப்பட்டுள்ள பொருட்களை ஒரு வருட காலத்திற்குள் கடன் செலுத்தப்பட்டு மீட்கப்படவேண்டும் என்பதனை மீண்டும் அறியத் தருகின்றோம்.

ஒருவருட காலத்திற்கு மேற்பட்ட அடகுப் பொருட்களை மீட்க/காலாவதி திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளர்களின் அடகுப் பொருட்கள் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம்.

தவிர்க்கமுடியாத காரணங்களால் முன் அறிவிக்கப்பட்ட திகதியில் நடைபெறாத ஏலவிற்பனை இம்மாதம் 21.01.2006 அன்று நடைபெறும். இத்திகதிக்கு முன்னதாக உங்கள் அடைவு நகைகளை மீளப்பெற/திகதியை நீடிக்க ஆவன செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

முகாமையாளர்.

[C/4996]

# மனித உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் விசேட ஆய்வறிக்கையாளர் ஒருவர் நியமனம்!

கொழும்பு —

அவசரகால நிலைமைகளின் போதும், போர்நிறுத்த மீறல்கள் நடைபெறும் போதும், மனித உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக விசேட ஆய்வறிக்கையாளர் ஒருவரை மனித உரிமைகள் ஆணைக்குழு நியமித்துள்ளது.

இது குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் -

அண்மைக்காலங்களில் ஆயுத முரண்பாடுகளோடு தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையில், அவற்றின் நிகழ்வுகளின்போது நியாயமற்ற வகையிலான கொலைகள், சுற்றிவளைப்புத் தேடுதல்கள், ஆட்கள் கைது செய்யப்படுதல், அவர்கள் தடுத்து வைக்கப்படுதல் போன்ற மனித உரிமை மீறல்களோடு தொடர்பான சம்பவங்கள் பரவலாக நாடு பூராகவும் குறிப்பாக வடக்கு - கிழக்கிலும் நடப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்திலும், பிராந்திய நிலையங்களிலும் தற்பொழுது பணிபுரிபவர்களைக் கொண்டு அவ்வகையான சந்தர்ப்பங்களில் ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயங்களைச் செயல்வலுவுள்ள வகையில் கண்காணித்து, விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க செய்விப்பது கடினமாக உள்ளமையால், அக்குறையைத் தீர்க்க வேறு பொறுப்புக்களுடன் பின்வரும் பொறுப்புக்களையும் ஏற்று, செயற்பட விசேட ஆய்வறிக்கையாளர் ஒருவரையும், அவரின் தலைமையின் கீழ் செயற்பட குழு ஒன்றையும் நியமிப்பது அவசியமாகியுள்ளது.

இந்தக் குழு -

போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்படும்போதும், அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும், சாதாரண குடிமக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்க எடுக்கப்படவேண் டிய ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குதல், தங்களது கடமைகளைப் புரியும் பொழுது மனித உரிமைகள் தொடர்பான பிரமாணங்களைப் பொலிஸாரும், படையினரும் பேணுவதைத் கண்காணிக்க அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, தக்வல்களைத் திரட்டுதல்,

தேவையேற்படும்போது விசாரணைகளை நடத்தி, ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்,

போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும்போதும், அவசரகால அதிகாரங் களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும் ஏற்படுகின்ற நிகழ்வுகளைத் தொகுத்து, மனித உரிமைகளின் நிலை பற்றி இருவாரங்களுக்கு ஒருமுறை அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய கடமைகளைச் செய்யும்,

போர்நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்படும்போதும், அவசரகால அதிகாரங் களைப் பயன்படுத்தும் தறுவாய்களிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பது சம்பந்தமான விஷேட ஆய்வறிக்கையாளர் பதவிக்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியும், அரசியல் யாப்பு சபையின் முன்னைநாள் உறுப்பினருமான சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக - இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றவரான எம்.சீ.எம் இக்பால், கடமையின்போது காணாமற்போன இராணுவத் தினரின் உறவினர்களின் சங்கத் தலைவியான விசாக தர்மதாச ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விஷேட ஆய்வறிக்கையாளர் அவர்களுக்கும், செயற்பாட்டு குழுவினருக்கும், பொலிஸாரும், பாதுகாப்புப் படையினரும் தங்களுடைய ஒத்துழைப்பை வழங்குவார்கள் என மனித உரிமைகள் ஆணைக்குழு எதிர்பார்க்கிறது எனவும் அந்த ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மேல்மாகாண சபைக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலாம்!

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம்பெறக்கூடும் என்ற அச்சத்தில் மேல்மாகாண சபை வளாகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் அச்சம் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் டக்ளஸ் பெர்னாண்டோ எழுப்பிய கேள்விக்கு மேல்மாகாண சபைத் தலைவர் ஜகத் அன்கசே பதிலளித்தபோது -

இதுதொடர்பாக தலங்கம பொலிஸ் பொறுப்பதிகாரி ரஞ்சித் தசநாயக்கவிடம் ஆலோசனை நடத்தியபோது அவர், சபை வளாகத்துக்குள் நுழையும் அனைத்து வாகனங்களும் சோதனைக்குட்படுத்தப்படும் என்பதுடன், பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் கூறினார். பொலிஸாரால் சபை வளாகத்துக்குள் முழுமையான பாதுகாப்பு அளிக்க முடியாது. இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகாணப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஓமந்தை முன்னரங்கப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டமாம்!

கொழும்பு —

ஓமந்தையிலுள்ள இராணுவத்தினரின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகளுக்கு அண்மையாக விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் பெருமளவில் நடமாடுவதை இராணுவத்தினர் அவதானித்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தம்மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்காகப் புலிகள் தமது நடமாட்டத்தை அதிகரித்திருக்கலாமென இராணுவத்தினர் தெரிவித்தனர். கடந்த மாதம் 31 ஆம் திகதி முற்பகல் 50 பேரடங்கிய புலிகளின் குழு அவர்களது சீருடையில், ஆயுதங்களுடன் வந்து தமது நிலைகளை அவதானித்துள்ளதாகவும் இராணுவத்தினர் தெரிவித்தனர். (தே)

# ஜனாதிபதி மகிந்தவுடன் சென்ற குழுவில் புலிகளுக்கு தகவல் வழங்குபவருமாம்!

## இந்திய உளவுத்துறை தெரிவிப்பு

கொழும்பு —

மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த மாதம் இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவில், விடுதலைப் புலிகளுக்குத் தகவல் வழங்குபவர் ஒருவரும் சென்றிருந்ததாக இந்தியப் புலனாய்வு அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தியா சென்ற அந்தத் தகவல் வழங்குபவர், ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் பங்குபற்றிய முக்கிய கூட்டங்களிலும் பங்குபற்றியுள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் தன்னைத் தனியார் தொலைக்காட்சி ஒன்றின் ஊடகவியலாளர் எனக் கூறியே இவர் இணைந்துள்ளதாக இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் இலங்கை அதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

இவரின் தொலைபேசி மூலமான உரையாடல்கள் பதிவு செய்யப்பட்டதில் அவர் விடுதலைப் புலிகளுக்குத் தகவல்களை அனுப்பியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர். இந்திய அதிகாரிகளின் இந்த எச்சரிக்கையை உறுதிப்படுத்திய இலங்கைப் பாதுகாப்பு அமைச்சு மேலதிக தகவல்களை வெளியிட மறுத்துவிட்டது.

# புலிகளால் பொலிஸார் கைதான விவகாரம் ஊடகங்கள் மீது ஆய்வாளர்கள் சாடல்!

கொழும்பு —

விடுதலைப் புலிகளின் விளக்கமறியலில் உள்ள 3 பொலிஸார் குறித்த செய்திகளை ஊடகங்கள் எச்சரிக்கையுடன் வெளியிட வேண்டும் என்று காவல்துறை ஆய்வாளர்கள் சங்கத்தலைவர் தாலே குணரத்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழீழ நீதித்துறை, தமிழீழ காவல்துறை என்று அழைக்கப்படுவதை ஊடகங்கள் அங்கீகரிக்கக்கூடாது. ஊடகத்துறையில் ஒரு பகுதியினர் விடுதலைப் புலிகளால் 3 பொலிஸார் கடத்தப்பட்டதை நியாயப்படுத்துவது போல் எழுதுகின்றனர்.

பொலிஸாரைக் கைது செய்ய புலிகளுக்கும், அவர்களின் கங்காரு நீதிமன்றங்களுக்கும் அதிகாரம் ஏதும் இல்லை. மூன்று பொலிஸாரையும் விடுவிக்க வேண்டும் என்று கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்டும்கூட வலியுறுத்தியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதி புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்த ஹக்ரப் ஹொக்லெண்ட் இதை வலியுறுத்தியதோடு கடுமையான கடிதம் ஒன்றையும் அனுப்பியிருந்தார் எனக் கூறிய அவர் - இது போன்ற நடவடிக்கை களை விடுதலைப்புலிகள் தொடர்ந்து செய்யாதிருக்கும் வகையில் ஊடகங்கள் செய்திகளை வெளியிடவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# ஐ.நா.வின் வழிகாட்டுதலிலே பயங்கரவாதப் பட்டியல்!

## நோர்வே அறிவிப்பு

கொழும்பு —

ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதலில்தான் பயங்கரவாதப் பட்டியல் வெளியிடப்படும் என்றும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வழிகாட்டுதல் இது விடயத்தில் பின்பற்றப்படமாட்டாது என்றும் - நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்ஸ் கார்ஸ்டோரெ அறிவித்துள்ளார்.

இது தொடர்பிலான உத்தியோகபூர்வ அறிக்கையை நோர்வே வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக இல்லாததால் ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதல்களுக்கு அமையவே தமது நாடு முடிவெடுக்கும் என்றும், சில அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணையாளராக இருப்பதால், அத்தகைய அமைதி முயற்சிகளின் எத்தரப்புக்கும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதற்காகவே தமது அரசாங்கம் இம்முடிவை மேற்கொண்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அனல் மின் நிலையங்கள்

கொழும்பு —

அம்பாந்தோட்டை, திருகோணமலையில் அனல் மின் நிலையங்களை அமைக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக மின்சக்தி துறை அமைச்சகம் அறிவித்துள்ளது. இந்த உத்தேச அனல் மின் திட்டங்கள் தொடர்பில் ஆய்வு செய்த சீனப் பொறியியலாளர்களின் அறிக்கைக்கு அமைய இந்த முடிவை அமைச்சர் டபிள்யு.டி.ஜே.செனவிரட்ன மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜின் கங்கா கெலவலபிட்டியாவிலும் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான சமிக்ஞைகளையும் அமைச்சர் அறிவித்துள்ளார். எதிர்கால மின்சார பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் வகையில் நுரைச்சோலை மற்றும் மேல் கொத்மல மின்திட்டங்கள் உடனடியாகச் செயற்படுத்தப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த மின்திட்டங்கள் தொடர்பிலான சீன அரசுடனான ஒப்பந்தம் இந்த மாத இறுதியில் கைச்சாத்தாகும் என்றும் செனவிரட்ன கூறினார்.

## புலிகளுடன் தொடர்பென அவதூறு

# ஐந்து லட்சம் ரூபா நட்டஈடு வழங்க சுப்பிரமணியம் சுவாமிக்கு உத்தரவு!

புதுடெல்கி —

இந்தியாவின் பிரபல வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாக ஆதாரமின்றி அவதூறு ஏற்படுத்தும் வகையில் அறிக்கை வெளியிட்டதற்காக - இந்திய உயர் நீதிமன்றம் சுப்பிரமணியம் சுவாமியை 5 லட்சம் ரூபா நட்ட ஈடுசெலுத்துமாறு உத்தரவிட்டுள்ளது

ராம்ஜெத்மலானி விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்றும்- இவர் புலிகளுக்கு ஆதரவான வழக்குகளில் ஆஜராவதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி குற்றம்சாட்டியிருந்தார்.

இதை எதிர்த்து புதுடெல்கி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார் வழக்கறிஞர் ராம்ஜெத்மலானி. இந்த வழக்கின் தீர்ப்பு கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

இதன்படி, ஆதாரமில்லாமல் ராம் ஜெத்மலானிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டதற்காக அவருக்கு 5 லட்சம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ராம்ஜெத்மலானி சந்தேக நபர்கள் சார்பில் வாதாடியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# விகிதாசார முறையிலேயே உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு —

தற்போது நடைமுறையிலுள்ள விகிதாசாரப்பிரதிநிதித்துவ முறையின் கீழ் ஒரே நாளில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் தொ[illegible]ர்பாக தேர்தல் ஆணையாளர் அனுப்பிய கடிதத்திற்கு உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் இது தொடர்பாகப் பதிலளித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலைத் தொகுதி முறையில் நடத்துவற்கான திருத்தங்களைச் செய்வதற்குப் போதிய கால அவகாசம் இன்மையால், தற்போது உள்ள முறைக்கமையவே இந்தத் தேர்தலை நடத்த முடிவெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வடக்கு-கிழக்கில் 53 உள்ளூராட்சி சபைகளுக்காகத் தற்போது ஏற்கபட்டுள்ள வேட்புமனுக்களை இரத்துச்செய்துவிட்டு, புதிதாக வேட்புமனு கோருவதற்கான அமைச்சரவை அறிக்கையையும் கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஜனக பண்டார தென்னக்கோன் தாக்கல் செய்தார்.

தற்போது செயல்படும் உள்ளூராட்சி அமைப்புக்களின் பதவிக்காலம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

அதனால் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சித்தேர்தல்கள் நடத்தப்படவேண்டியுள்ளது.

இதேவேளை, அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப எதிர்வரும் மார்ச் அல்லது ஏப்ரலில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறக்கூடும் என்று உதவித்தேர்தல் ஆணையாளர் டபிள்யு.ஜி. சுமணசிறி தெரிவித்தார்.

# கடற்படை ஆயுதக்கொள்வனவு ஊழல்: விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவு!


கொழும்பு —

இங்கிலாந்திலிருந்து பில்லியன் ரூபாய்கள் மதிப்பிலான 30 எம்.எம். துப்பாக்கிகள் கொள்வனவு அண்மையில் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். இதற்கென ஓய்வு பெற்ற தலைமை நீதிமன்ற நீதிபதி உள்ளிட்ட மூவர்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான ஊட கங்களின் செய்திகள் தமக்கு வேதனையளிப்பதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கடற்படைக்கான ஆயுதக் கொள்வனவில் மோசடி நடந்திருப்பதாகக் கொழும்பு ஊடகம் சில நாட்களுக்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தது. இதை முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நிராகரித்து இருந்தார்.

23 எம்.எம். துப்பாக்கிகளுக்குப் பதில் 30 எம்.எம் துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பான அனைத்து நடைமுறைகளும் கடற்படையின் ஒப்பந்த சபை விதிமுறைகளுக்கு அமையவே மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் கூறியிருந்தார்.

# நாலாவது போட்டியிலும் இலங்கை நியூஸிலாந்திடம் தோல்வியுற்றது



வெலிங்டன்

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் வெலிங்டனில் நேற்று நடைபெற்ற நான்காவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அவ்வணி சார்பாக வின்சென்ட் மற்றும் கௌவ் இணைந்து கொண்டனர்.

எனினும், ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களை இலங்கை பந்துவீச்சாளர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற்றினர். நியூஸிலாந்து அணி 14 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் அவர்களது ஆரம்ப வீரர்கள் இருவரும் வெளியேற்றப்பட்டனர். இதில் கௌவ் 5 ஓட்டங்களுடன் வாஸின் பந்திலும், வின்சென்ட் 8 ஓட்டங்களுடன் பெர்னாண்டோவின் பந்திலும் வெளியேறினர்.

இதனையடுத்து அணித் தலைவர் பிளெமிங் மற்றும் புல்ரொன் இருவரும் பொறுப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தபோதிலும், பிளெமிங் 37 ஓட்டங்களுடன் வாஸின் பந்தில் போல்டானார்.

அடுத்து மார்ஷல் இணைந்தார். இவர்களும் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்த புல்ரொன் - பெர்னாண்டோவின் பந்தில் மஃரூப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்த ஸ்ரைரிஸ் இணைந்தார். எனினும், அவரால் பெரிதாக ஸ்கோரை எட்டமுடியவில்லை. அவர் 13 ஓட்டங்களுடன் வாஸினால் வெளியேற்றப்பட்டார்.

அடுத்து கெய்ன்ஸ் மற்றும் மக்கலம் இருவரும் முறையே 2, 1 ஓட்டங்களுடன் வாஸினால் வெளியேற்றப்பட்டனர். இதன்பின் விற்றோரி வந்தார். எனினும் மறுமுனையில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்த மார்ஷல், மஃரூப்பின் பந்தில் வாஸிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

இதன்பின் விற்றோரி 7 ஓட்டங்களுடன் இருந்தபோது - முரளியின் பந்தில் போல்டானார். 50 ஓவர்கள் நிறைவில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிராங்ளின் 29, பொண்ட் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தனர்.



சிறப்பாகப் பந்துவீசிய வாஸ் 5, பெர்னாண்டோ 2, மஃரூப் மற்றும் முரளிதரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

225 ஓட்டங்கள் என்ற மிகச் சுலபமான இலக்குடன் இலங்கை அணியின் தரங்க மற்றும் முபாரக் களமிறங்கினர்.



எனினும், அணி 16 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் தரங்க 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சங்ககார இணைந்தார். இதில் முபாரக் பொறுமையான ஆட்டத்தைக் கடைப்பிடிக்க, சங்ககார அடித்தாடினார்.

இந்த நிலையில் அணி 92 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் 46 பந்துகளில் 9 பவுண்டரிகள் அடங்கலாக 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார, கெய்ன்ஸின் பந்தில் போல்டானார்.



இதன்பின் வந்த ஜெயவர்த்தன 12, அத்தபத்து 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க - டில்ஷான் இணைந்தார். எனினும், மறுமுனையில் 84 பந்துகளில் 6 பவுண்டரிகள் அடங்கலாக 53 ஓட்டங்களைப் பெற்றிருந்த முபாரக் ஆட்டமிழந்தார்.

இதன்பின் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் வேகமாக வீழ்த்தப்பட்டன. இதில் டில்ஷான் 17, மஃரூப் 0, சமிந்த வாஸ் 9, ஆர்னோல்ட் 11, பண்டார 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களையே பெற்றதனால் 21 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் பொண்ட் 3, பிராங்ளின் மற்றும் பட்டேல் இருவரும் தலா 2, கெய்ன்ஸ், ஸ்ரைரிஸ், விற்றோரி மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

விளையாட்டு

# பாகிஸ்தானின் எந்தச் சவாலையும் சந்திப்பதற்கு இந்திய அணி தயார்

## அதிரடி வீரர் ஷேவாக் தெரிவிப்பு



பெங்களூர்

பாகிஸ்தான் அணியினது எந்தச் சவாலையும் சந்திக்கத் தயார் என்று இந்திய அணி வீரர் ஷேவாக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது -

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அக்தர் இந்திய அணிக்குச் சவாலாக விளங்குவார் என்பது அவர்களுடைய கருத்து. பந்துவீச்சு மட்டுமல்ல, எந்த ஒரு சவாலையும் சந்திக்கத் தயார் நிலையில் உள்ளோம். அதற்குத் தகுந்தவாறு எங்களை தயார்படுத்தி வருகிறோம்.

இரு அணிகளுமே பலம் வாய்ந்தவை. எனினும் போட்டி நடைபெறும் அன்றையதினம் எந்த அணி சிறப்பாக ஆடுகிறதோ அந்த அணிதான் வெற்றிபெறும். பயிற்சியாளர் சப்பல் என் நம்பிக்கையை வளர்க்க மிகவும் உதவியாக உள்ளார்.

அவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். துடுப்பாட்டத்தின்போது அவருடைய ஆலோசனைகள் எனக்கு நல்ல முறையில் உதவியாக உள்ளது. பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தொடக்க ஆட்டக்காரராக என்னுடன் காம்பீர் களமிறங்குவதை விரும்புகிறேன். அவர் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். பாகிஸ்தானில் நடைபெறும் பயிற்சி ஆட்டம் பயன் உள்ளதாக இருக்குமென அவர் கூறினார்.

# பாகிஸ்தானுக்குச் சென்றது இந்திய கிரிக்கெட் அணி

## இன்று முதல் பயிற்சி ஆட்டம்



லாகூர்

இந்திய கிரிக்கெட் அணி நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்கு சென்று சேர்ந்துள்ளது.

இந்திய வீரர்களுடன் பாகிஸ்தான் முன்னாள் கப்டன் இம்ரான் கான் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார் கானும் உடன் சென்றனர். விமானம் சுமார் நான்கு மணி நேரம் தாமதமாக இரவு 10 மணிக்குத்தான் புதுடெல்கியிலிருந்து புறப்பட்டது.

லாகூர் விமான நிலையத்தில் 10.30 மணியளவில் சிறப்பு விமானம் தரையிறங்கியது. அங்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள், இந்திய தூதரக அதிகாரிகள் இந்திய வீரர்களுக்கு சிறப்பான வரவேற்பு கொடுத்தனர். விமான நிலையத்திற்கு வெளியே திரண்டிருந்த ஏராளமான ரசிகர்களும் உற்சாக குரல் எழுப்பி வாழ்த்து தெரிவித்தனர்.

இந்திய அணி முதலில் மூன்று நாள் பயிற்சி போட்டியில் இன்று விளையாடவுள்ளது. அதற்கு பிறகு முதல் டெஸ்ட் லாகூரில் எதிர் வரும் 13 ஆம் திகதி தொடங்குகின்றது.

# இந்திய - பாகிஸ்தான் போட்டியே உலகின் தலைசிறந்த தொடராகும்

## இந்திய பயிற்சியாளர் சப்பல் தெரிவிப்பு



புதுடெல்கி

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான தொடரே உலகின் தலைசிறந்த கிரிக்கெட் தொடராகத் திகழ்கிறது என இந்திய அணியின் பயிற்சியாளர் கிரேக் சப்பல் தெரிவித்தார்.

3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக புதுடெல்கியிலிருந்து பாகிஸ்தானுக்கு இந்திய அணி புறப்பட்டுச் சென்றது. அதற்கு முன்னதாக பத்திரிகையாளர்களிடம் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது -

இந்திய - பாகிஸ்தான் அணிகளிடையிலான தொடரே உலகில் தலைசிறந்த தொடராகத் திகழ்கிறது. இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகளிடையிலான ஆஷஸ் தொடருக்கு வரலாற்றுப் பின்புலம் பலமாக இருக்கலாம். ஆனால், இந்திய - பாகிஸ்தான் தொடர் இந்த இரு நாடுகளைச் சாராத பகுதிகளில் முன்னிலை பெற்றுள்ளது. மோதல்களிலும் முதன்மையானதாகவே உள்ளது.

கடந்த முறை இந்தியாவிடம் தொடரை இழந்த பாகிஸ்தான் அணி தற்போது மிகுந்த நம்பிக்கையுடன் உள்ளது. இந்திய அணி, தனது மேம்பட்ட ஆட்டத்தைத் தொடர்வதற்கு பாகிஸ்தான் சுற்றுப்பயணம் வாய்ப்பாக அமைந்துள்ளது.

கிரிக்கெட்டில் திறமையான அணிகளை பரீட்சித்துப் பார்க்க வாய்ப்பாகவும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் இந்தியாவுக்கு அமைந்துள்ளது.

இந்திய - பாகிஸ்தான் தொடர் என்றாலே ஒருவித ஆர்வம், எதிர்பார்ப்பு, உற்சாகம் தானாகவே ரசிகர்களுக்கு ஏற்பட்டு விடுகிறது. இதனாலேயே மற்றைய தொடர்களை விடவும், இந்தத் தொடர் முக்கிய இடத்தைப் பெறுகிறது. அதில் நானும் ஒருவர் என்பதில் பெருமை அடைகிறேன் என்றார் சப்பல்.

இதேவேளை, ஒவ்வொரு கிரிக்கெட் தொடருமே இந்தியாவுக்கு சவாலானதுதான் என இந்திய அணியின் கப்டன் ராகுல் ராவிட் தெரிவித்தார்.

2006இல் இரு அணிகளுமே புதிதாகத் தொடரைத் தொடங்கவுள்ளோம். யாருக்கு வெற்றி வாய்ப்பு அதிகம். யார் அதிகமான ஓட்டங்களைக் குவிப்பார் என்பது முக்கியமல்ல. அதேபோல முந்தய பதிவுகளும் முக்கியமல்ல.

10 ஆண்டுகளுக்கு முன்பு சர்வதேச கிரிக்கெட்டில் அடியெடுத்து வைத்தேன். பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் தற்போது கப்டன் என்பதை கற்பனை செய்துகூட பார்க்கமுடியவில்லை.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடர் தான் நீங்கள் எதிர்கொள்வதிலேயே மிகவும் சவாலானதா எனக் கேட்டதற்கு - ராகம் பாடி எனது குழந்தையை தூங்கவைப்பதுதான் அனேகமாக மிகவும் கடினமானதாக இருக்குமென நினைக்கிறேன் என்றார் ராவிட்.

# அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலியா வெற்றி

# தென்னாபிரிக்க அணி பரிதாபமாக தோல்வி



சிட்னி

தென்னாபிரிக்க அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் பொண்டிங் மற்றும் ஹைடனின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணி அபார வெற்றியைப் பெற்றது.

இரு அணிகளுக்கு மிடையே 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் - பேர்த்தில் நடந்த முதல் டெஸ்ட் சமநிலையில் முடிந்தது. மெல்பேர்னில் நடந்த 2ஆவது டெஸ்டில் அவுஸ்ரேலியா வெற்றி பெற்றது.

இந்த நிலையில் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னி நகரில் நடைபெற்று முடிந்தது. இதன் முதல் இனிங்சில் தென்னாபிரிக்கா 451 ஓட்டங்களையும், அவுஸ்ரேலியா 359 ஓட்டங்களும் எடுத்தன. இதையடுத்து 2 ஆவது இனிங்ஸை ஆடிய தென்னாபிரிக்க அணி நேற்றுமுன்தினம் 4 ஆவது நாள் ஆட்டநேரமுடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 94 ஓட்டங்களை எடுத்தது.


கலிஸ் 14 ஓட்டங்களுடனும் பிறின்ஸ் ஓட்டமெதனையும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர். நேற்று கடைசிநாள் ஆட்டம் நடைபெற்றது. எப்படியும் இந்த டெஸ்டில் வெற்றி பெற்று தொடரை சமன்செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் தென்னாபிரிக்கா விளையாடியது. அந்த அணி 6 விக்கெட் இழப்புக்கு 194 ஓட்டங்களை எடுத்திருந்தபோது டிக்ளேர் செய்வதாக சிமித் அறிவித்தார்.

முதல் இன்னிங்ஸில் பெற்ற கூடுதல் ஓட்டங்கள் மூலம் அவுஸ்ரேலிய அணிக்கு 287 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய ஆட்டத்தில் 76 ஓவர்களே மீதமிருந்தது. எப்படியும் அவுஸ்ரேலிய அணியைத் தோற்கடித்துவிடலாம் என தென்னாபிரிக்கா அசுர வேகத்தில் பந்து வீசத் தொடங்கியது.

76 ஓவர்களில் வெற்றி இலக்கை அடைந்தே தீரவேண்டும் என்ற நோக்கத்தில் அவுஸ்ரேலிய அணி ஒருநாள் போட்டிபோல் அதிரடியாக அடித்து ஆடி ஓட்டங்களைக் குவித்தது. தொடக்க ஆட்டக்காரர்களான லாங்கரும் ஹைடனும் தென்னாபிரிக்க பந்து வீச்சை நாலாபுறமும் விளாசித் தள்ளினர். லாங்கர் 20 ஓட்டங்களில் லாங்வெல்ட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.



அடுத்து பொண்டிங் களமிறங்கினார். இருவரும் அசுர வேகத்தில் ஓட்டங்களைக் குவித்தனர். ஸ்கோர் 212 ஆக இருந்தபோது ஹைடன் ஆட்டமிழந்தார். அவர் 11 பவுண்டரிகள் அடங்கலாக 90 ஓட்டங்களைக் குவித்தார்.



பொண்டிங் அபாரமாக ஆடி சதமடித்தார். இது அவருடைய 28 ஆவது சதம் ஆகும். மேலும் அவர் இந்த டெஸ்டில் அடிக்கும் இரண்டாவது சதமாகவும் இது அமைந்தது. பொண்டிங் முதலாவது இன்னிங்ஸிலும் சதம் அடித்திருந்தார்.

பொண்டிங்கின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணி 60.3 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 288 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. பொண்டிங் 159 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் 143 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்ரேலிய அணி டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றது.

பொண்டிங்கின் அதிரடி ஆட்டத்தால் அவுஸ்ரேலிய அணி வெற்றி பெற்றது சிறப்பம்சமாக அமைந்தது. வெற்றி பெற்று விடலாம் என எண்ணிய தென்னாபிரிக்க அணியின் கப்டன் சிமித்தின் முடிவு விபரீதத்தில் முடிந்தது.

# மின்மினிப் பூச்சியும், சிலந்தியும்

அடிவானத்தில் சூரியன் மறையத் தொடங்கினான். மாலைப் பொழுது மயங்கி இருள் சூழ ஆரம்பித்ததும் பறவையினங்கள் தத்தமது வதிவிடங்கள், கூடுகளை நோக்கிப் பறந்தேகின. வெளவால்களும் ஆந்தைகளும் தமக்கான இரைதேடல் வேட்டைக்குத் தயாராகின. சில பறவைகள் உறங்கியும், சில பறவைகள் விழித்தெழும் நேரமாகவுமிருந்ததால் மின்மினிப்பூச்சியும் திடீரென விழித்துக் கொண்டது. மற்றைய அதன் உறவுகளெல்லாம் ஏற்கனவே இரைதேடப்புறப்பட்டுவிட்ட நிலையில் இது விழித்தெழத் தாமதமானது. தன் இறக்கைகளைச் சோம்பலுடன் விரித்து மற்றவைகளைத் தேடிய வண்ணம் பறக்க ஆரம்பித்தது அந்தச் சின்னஞ் சிறிய மின் மினிப்பூச்சி.



இருட்டில், மரங்கள் செடிகளடர்ந்த பகுதிகளூடாகப் பறந்து கொண்டிருந்தது. அதன் உடலின் பின்புறத்திலிருந்து வெளிப்பட்ட ஒளிப்பிரவாகத்தைத் தவிர வேறு ஒளி யிருக்கவில்லை. இருந்தாலும் அந்த இருளிடையே தோற்றம்பெற்ற ஒரு ஒளித்தொகுதியைத் திடீரெனக் கண்டது. அது தூரத்திலிருந்ததால் தன் இனத்தவர் கூட்டமாக இருக்கலாமெனவும் நம்பியது.

மெதுமெதுவாக தனண்டை செல்லமுற்பட்டதும் அந்த ஒளி மிக மிகப் பெரிதாகிப் பெரிதாகி வருவதைக் கண்டது.

இப்போது ஒரு வீடு இருக்குமிடத்தை அது வந்தடைந்தது. வீட்டு ஜன்னல் கண்ணாடிச் சட்டங்களிடையிலிருந்து வந்த வெளிச்சத்தை நோக்கி தொடர்ந்து கொண்டிருந்தது. ஒரு ஜன்னல் திறக்கப்பட்டதும் அதனூடாக வீட்டினுள் சென்றது. மரங்கள், பூக்கள் எதுவும் அங்கு காணப்படவில்லை. வித்தியாசமான இடமாக இருக்கக் கண்டு ஆச்சரியமடைந்தது.

ஆஹா! என்ன அற்புதமான இடத்தில் நானிருக்கிறேன்! இங்கே வேறு நண்பர்கள் எவரும் இருக்கும்படியான அடையாளமெதனையும் காணவில்லையே! எனத் தனக்குள் கூறியது.

இதே வீட்டில் மணி என்ற பையன் வாழ்ந்து வந்தான். குடும்பத்தில் அவன் தான் இளைய பையன். அவன் தனது இரவுணவைப் புசித்துக் கொண்டிருக்கும் போது சிறிய அற்புத ஒளியொன்று அந்த அறையினுள் நகர்வதைக் கண்ணுற்றான். அந்த வெளிச்சம் சில கணம் மறைந்து போயும், சில சமயங்களில் தோற்றமளித்தும் காணப்பட்டது. நீண்ட நேரமாக இவ்வாறு நடந்து கொண்டிருந்தது. இது ஏதுவாக இருக்கலாமெனவும் அறிய மணி மிகுந்த ஆவல் கொண்டான்.

இதேநேரம் எங்கள் சின்னஞ்சிறிய மின்மினிப்பூச்சியோ சிறைக்குள்ளிருந்து வெளிச்சங்களாலும், வானங்களாலும் கவரப்பட்டு, மதிமயங்கி தனக்கு முன்னாலும் மேலாகவும் இருந்தவற்றைக் கவனியாது பறந்ததால் பெரும் சிலந்தியிடம் மாட்டிக்கொண்டது.

இதனிடையே பசியால் வாடிய சிலந்தியொன்று இந்த மின்மினிப் பூச்சியின் நடத்தைகளை மிக ஆவலுடன் அவதானமாகக் கண் காணித்துக் கொண்டிருந்தது. ஆபத்தை உணராத அந்தச் சிறிய பூச்சி நேராக சிலந்தி வலைக்குள் பறந்ததால் அதில் மாட்டிக் கொண்டது. அதிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள பெரும் பாடுபட்டது. இப்போது பெரிய சிலந்தி அதனருகில் வந்து கொண்டிருந்தது. இதைக் கண்டு மின்மினிப் பூச்சி தவியாய்த் தவித்தது. தன் வலையில் சிக்கிக் கொண்டுவிட்டதே என்பதில் சிலந்திக்கு மிக்க மகிழ்ச்சி! அது விரைவாகவே பின்னால் சென்று, தன் சிலந்திக் குஞ்சுகளையும், உணவை ருசிப்பதற்காக அழைத்து வந்தது.

அம்மா, இன்றைக்கு எங்கள் உணவுக்குக் கிடைத் திருப்பது வித்தியாசமான கோமாளிப் பேர்வழி போலிருக்கிறதே! என்றது ஒரு குஞ்சு. ஆம், குழந்தாய்! இப்படியொரு அதிசயப் பிராணியை முன்னொரு போதும் நான் கூடப் பார்க்கவில்லையே என்ற போது, அதைப் பிடித்து இப்படிக் கொண்டு வாருங்கள் என சிலந்திக் குஞ்சு கூறியது. பிள்ளைகளே! இப்போது முண்டியடிக்காதீர்கள் இது ஒரு அதிசயப் பிராணி என்பதால் நானே முதலில் சுவைத்துப் பார்க்கப் போகிறேன் என்ற தாய்ச்சிலந்தி அதனருகில் வந்தபோது மின் மினி மிகவும் பயந்தது. என்னைப் போகவிடுங்கள் என்னை ஒன்றும் செய்யா தீர்கள் என அழுதது. நானும் பிள்ளைகளும் உன்னை இரையாக்கப் பல மணி நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறோம். இன்றைய எங்களுக்குரிய உணவு நீதான்.

சின்னஞ் சிறிய மின்மினிப் பூச்சி மிகவும் திகிலடைந்து தன்னிடமிருக்கும் ஒளியை மின்னி மின்னிக் காட்டிக் கொண்டிருந்தது. அதே வேளை இந்த மர்மமான வெளிச்சத்தை ஆவலுடன் உற்றுப் பார்த்த மணியும் எங்கிருந்து அந்த ஒளி வந்தது என்பதறிய அதனருகே சென்றான். அந்த வெளிச்சம் சிலந்தி வலையிலிருந்து வருவதறிந்து தாயாரிடம் அறிவிக்க ஓடினான். அங்கு வந்த இருவரும் வலையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த மின்மினியை வெளியிலெடுத்து காகிதத்தாளில் வைத்தனர். இப்போது அதிக பயமடைந்த மின்மினி தன்னை யாரோ எடுப்பதைக் கண்டு நிலைத்து கண்களை மூடிக்கொண்டது. சில ஒலிகள் வருவதையுணர்ந்து கண்களைத் திறந்தது. தான் சிலந்தி வலையினின்று அகற்றப்பட்டதையும் இரண்டு பூதங்கள் தன்னை ஆர்வத்துடன் உற்றுப் பார்ப்பதையும் கண்டு அந்தப் பூதங்களுக்குத் தன்னை விடுவித்துக் காப்பாற்றியதாக உணர்ந்து அதற்கான நன்றி தெரிவித்துவிட்டு தன் நண்பர்களைத் தேடி ஜன்னலினூடாகப் பறந்து போனது.



# துருவன்

# பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

### ஹார்ன் பில்கள்

இந்தப் பறவைகள் ஆசியா, ஆபிரிக்காவைச் சேர்ந்தவை. இவை மரங்களில் உள்ள பொந்துகளின் கரைப்பகுதிகளைக் களிமண்ணினால் பூசி மறைக்கின்றன. மையப் பகுதியை மட்டும் அடைக்காமல் விட்டுவிடுகின்றன. பெண்பறவை உள்ளே புகுந்து கொண்டதும் ஆண் பறவை அதையும்மெல்ல மூடி, ஒரு சிறிய துவாரத்தை மட்டும் விட்டு விடும். பெண் பறவை முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்வரை ஆண் பறவையே அதற்கான உணவைத் தேடிக் கொடுக்கும்.

### எம்பரர் பென்குயின்

இது ஒரு விநோதமானபறவை. பெண்பறவை, அண்டார்ட்டிக்காவின் பனிக்காலத்தின்போது ஒரு முட்டையை மட்டும் இட்டுவிட்டுப் போய்விடும். மூன்று மாதங்களாக அந்த முட்டையைத் திரும்பியும் பாராது. ஆண் பறவைதான் ஏராளமான இரத்த நாளங்கள் நிறைந்த தனது கால்களுக்கிடையில் அந்த முட்டையை வைத்து,தனது அடிவயிற்றில் தொங்கும் அடைகாக்கும் பையினால் மூடிக்கொள்கிறது. முட்டை பொரிக்கும் காலத்தில் பெண்பறவை தான் தேடி வைத்திருக்கும் உணவுடன் திரும்புகிறது. ஆண் பறவைக்கும் குஞ்சுக்குமான உணவை ஊட்டுகிறது. திரும்ப ஆண்பறவை உணவு தேடப் புறப்படும்.

### ரெய்லர்

இது ஆசியாவைச் சேர்ந்தது. இந்தப் பறவை பஞ்சு, மரப்பட்டை, சிலந்திவலை என்பவற்றைப் பாவித்து நூலாக்கிக் கொள்கிறது. பெரிதான இலைகளைத் தெரிவுசெய்து அதன் கரைப்பகுதிகளில் தனது அலகினால் துளைகளை இடுகிறது. பின்னர் இரு கரைகளையும் இணைத்து தயாரித்துக்கொண்டநூலினால் தைத்துக்கொள்கிறது. இறுதியாக அந்த நூலில் ஒரு முடிச்சைப்போட்டு, கழன்று போகாமல் வைத்திருக்கிறது. பின்னர் கிண்ணம்போல ஆகியிருக்கும் பகுதியில் கூட்டையமைத்து முட்டைகள் இடுகிறது

### பெண்டுலைன் டிப்

இது மிருதுவான தாவரத்தின் பகுதிகளையும், புற்களையும் உபயோகித்து, தனது கூடுகளை ஆக்கிக்கொள்கிறது. இதனால் இவற்றின் கூடுகள் ஒட்டுக் கம்பளம் போலத் தோற்றமளிக்கிறது. இவற்றைப் புற்களில் ஆக்கும்போது குறுக்கும் நெடுக்குமாக அவை சீரமைக்கப்படும். வெளியே தொங்கும் புல் நுனிகளைத் தனது அலகினால் உட்செருகி ஒழுங்கமைக்கும் பின்னர் மிருதுவான பொருட்களை அதன் இடையிடையே பொருத்துவதால் அவை உறுதியாகவும், மிருதுவாகவும் அமைகின்றன. இதனால் இதனைப் பணப்பைகளாகவும், சிறுபிள்ளைகளின் பாதணிகளாகவும் கூட மக்கள் பாவிக்கின்றனர்.

### ஹார்ன் கூட்

இந்தப் பறவை தனது கூட்டைப் பொதுவாக சமதளமான தீவுகளில்தான் அமைக்கின்றன. ஆனால் இப்படியான தீவுகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தப் பறவைகள் என்ன செய்யும் தெரியுமா? பொருத்தமான நீர்நிலைகளை நாடிச் சென்று, அதன் நடுவே தனது அலகினால் கற்களைப் பொறுக்கிவந்து குவிக்கிறது. இப்போது நீருக்கு நடுவே ஒரு தீவு தயாராகிவிடுகிறது. இதற்காக ஒருதொன் எடையுள்ள கற்களைக் கூடக்கொண்டு வருமாம்.



## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.....................................
கற்கும் பாடசாலை :.....................................
கற்கும் தரம் :.....................................
வீட்டு முகவரி :.....................................
பிறந்த திகதி :.....................................
ஆர்வமுள்ள துறைகள் :.....................................
.....................................

........................ ........................
திகதி ஒப்பம்

........................ ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் :- த.கஜப்பிரியா
தரம் :- 04
பாடசாலை :- யாழ்ப்பாணக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- விஞ்ஞானத்துறை, T.V பார்த்தல்.

பெயர் :- செ.டஷாலினி
தரம் :- 05
பாடசாலை :- உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், சித்திரம் வரைதல்

பெயர் :- த.கஜகுகன்
தரம் :- 06
பாடசாலை :- யாழ்ப்பாணக் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- கணிதத்துறை, பத்திரிகை வாசித்தல்.

பெயர் :- க.அனுசியா
தரம் :- 06
பாடசாலை :- கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வித்துறை, பத்திரிகை வாசித்தல்.



பெயர் :- அ.டனிதர்மிகா
தரம் :- 07
பாடசாலை :- யா/திருக்குடும்ப கன்னியர்மடம்
துறைகள் :- பாடங்கள் படித்தல், பத்திரிகை வாசித்தல்.

## பெயர்கள் பிறந்த விதம்

**1. ஜீப் (Jeep)**

மலைப் பாங்கான பகுதிகளில் இலகுவாகப் பயணம் செய்வதற்கு ஜீப் வண்டி பாவிக்கப்படுகிறது. இதற்கு எப்படி இந்தப் பெயர் வந்தது?

இரண்டாம் உலகப் போரின்போது இந்த வகை வாகனங்களைப் பொதுவான தேவைகளுக்குப் பயன்படுத்தி வந்தனர். அதாவது General Purpose என்பதை G.P எனச் சுருக்கமாக் கூறினர். அதுவே நாளடைவில் ஜீப் (Jeep) ஆகிவிட்டது.

**2. நைலோன் (Nylon)**

இவ்வகைத் துணியைக் கண்டு பிடித்தவர் கரோதெர்ஸ் என்ற அமெரிக்கர் ஆவார். இவர் நியூயோர்க்கில் (Newyork) வசித்து வந்தார். ஆனால் இவரின் பிறந்த இடம் லண்டன் (London) ஆகும். ஆகையால் இரண்டு இடங்களினதும் பெயர்களில் வரும் முற்பகுதிகளின் இணைப்பே நைலோன் (Nylon) ஆனது என்று கூறப்படுகிறது.

**3. சம்பளம் (Salary)**

எப்படி வந்தது இந்தச் சம்பளம், ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்களின் உழைப்பிற்கான ஊதியமாக சம்பா நெல்லும் உப்பும் வழங்கப்பட்டதாம். உப்புத் தயாராகும் இடம் அளம் என்பதால் சம்பாவும் அளமும் சேர்ந்து சம்பளமான தாம்.

சம்பளம் சலறி (Salary) ஆனதும் இப்படித் தான். எதியோப்பியா, ரோம் போன்ற இடங்களில் கூலிகளுக்கு உப்புத்தான் அளந்து கொடுக்கப்பட்டதாம். அந்த உப்பை லத்தீன் மொழியில் சலேரியம் என்பதால் அதில் இருந்து சலறி (Salary) என்ற ஆங்கிலச் சொல் வந்தது என்பர்.

**4. தமிழ் எப்படிப் பிறந்தது?**

தமிழ் மொழி இனிமையானதாக இருந்ததாம். அதனால் அதை அமிழ்து என்று அழைத்தனராம். அமிழ்து அமிழ்து என்று தொடர்ந்து கூறிப்பார்த்தால் என்ன வருகிறது என்று கவனியுங்கள். அதுதான் தமிழானது. எப்படி எங்கள் தமிழின் பெருமை?



## குழந்தையிடம் செல்லாது சமாதானம்

குட்டிக்கதை

அமைச்சர் பீர்பால் நாள்தோறும் காலம் தவறாமல் அரசவைக்கு வந்துவிடுவார். ஒருநாள் அவர் காலதாமதமாக வந்தார்.

''என்ன பீர்பால்? இன்று ஏன் தாமதம்?'' என்று கேட்டார் அக்பர்.

''பேரரசே! இன்றும் வழக்கம் போலத்தான் புறப்பட்டேன். என் மூன்று வயது மகன் அழுது அடம் பிடித்தான்.

அவனைச் சமாதானம் செய்ய முயன்றேன். என்னால் முடியவில்லை. அதனால்தான் தாமதம்.''

சிரித்த அக்பர், ''சிக்கலான வழக்குகளை எல்லாம் தீர்த்து வைக்கும் அறிவுடையவர் நீர். மூன்று வயதுக்குழந்தையை உம்மால் சமாதானம் செய்ய முடியவில்லையா? நம்ப முடியவில்லையே'' என்றார்.

''பேரரசே! மதம் கொண்ட யானையை ஒரு நொடிக்குள் அடக்கிவிடலாம். வலிமை மிகுந்த எதிரியின் பெரும்படையை எளிதில் வெல்லலாம். அழுது அடம் பிடிக்கும் குழந்தையைச் சமாதானம் செய்வது யாராலும் இயலாத செயல்.''

''குழந்தையைச் சமாதானம் செய்வது அவ்வளவு கடினமான செயலா?''

''பேரரசே நீங்கள் ஒத்துழைப்பதாகச் சொல்லுங்கள். அது அவ்வளவு கடினமான செயல் என்பதைப் புரியவைக்கிறேன்.''

''நான் என்ன செய்யவேண்டும்?''

''பேரரசே! சிறிது நேரம் நீங்கள் என் தந்தையாக நடியுங்கள். நான் உங்கள் குழந்தையாக அழுது அடம் பிடிக்கிறேன். என்னைச் சமாதானம் செய்ய முயற்சி செய்யுங்கள்.''

''சரி! நீர் குழந்தையாக நடித்து அழுது அடம் செய்யும்.''

பீர்பால் தரையில் அமர்ந்தார். கையையும், காலையும் உதைத்துக்கொண்டு குழந்தைபோல அழத்தொடங்கினார்.

இந்த விளையாட்டு அக்பருக்குப் பிடித்திருந்தது.

அரியணையை விட்டு இறங்கிய அவர் பீர்பாலின் அருகில் வந்தார்.

''மகனே! ஏன் அழுகிறாய்? உனக்கு என்ன வேண்டும்? எதுவானாலும் கேள். கொண்டுவந்து தருகிறேன்'' என்றார்.

''அப்பா! எனக்கு ஒரு யானை வேண்டும். இப்பொழுதே இங்கேயே கொண்டுவரவேண்டும்'' என்று அழுதார் பீர்பால்.

வீரன் ஒருவனை அழைத்த அக்பர் அவனிடம் ஏதோ சொன்னார்.

சிறிது நேரத்தில் பொம்மை யானையுடன் அவன் வந்தான்.

அந்தப் பொம்மை யானையைப் பீர்பாலிடம் தந்தார் அக்பர்.

''எனக்குப் பொம்மை யானை வேண்டாம். நடக்கிற துதிக்கையை ஆட்டுகிற உயிருள்ள யானைதான் வேண்டும்'' என்று அழுதார் பீர்பால்.

''உண்மையான யானையைக் கொண்டு வாருங்கள்'' என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டார்.

பெரிய யானையை அங்கே கொண்டுவந்து நிறுத்தினார்கள் வீரர்கள்.

''மகனே! நீ கேட்ட யானை வந்துவிட்டது. அழுவதை நிறுத்து'' என்றார் அக்பர்.

''அப்பா! எனக்கு ஒரு பானை வேண்டும்'' என்று அழுதார் பீர்பால்.

பானையைக் கொண்டுவருமாறு கட்டளையிட்டார் அக்பர். சிறிது நேரத்தில் வீரன் ஒருவன் பானையைக் கொண்டு வந்தான்.

''மகனே! நீ கேட்ட பானையும் வந்துவிட்டது. அழுவதை நிறுத்து'' என்றார் அக்பர்.

''அப்பா! இந்தப் பானைக்குள் அந்த யானை போக வேண்டும். நான் அதைப் பார்க்கவேண்டும்'' என்று அழுதார் பீர்பால்.

''மகனே! சிறிய பானைக்குள் பெரிய யானை எப்படிச் செல்லமுடியும்?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. பானைக்குள் யானை போயாக வேண்டும்.''

''யானையைப் பானைக்குள் போகச் சொல்கிறான் என் மகன். அதை நிறைவேற்றுங்கள்'' என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டார் அக்பர்.

பானையின் மேல் யானை காலை வைத்தது. பானை உடைந்து நொறுங்கியது.

இதைப் பார்த்த பீர்பால் உரத்த குரலில் அழத் தொடங்கினார்.

''மகனே! உனக்கு என்ன வேண்டும்?''

''பானை வேண்டும்.''

''வீரர்களே! இன்னொரு பானையை இங்கே கொண்டு வாருங்கள்'' என்றார் அக்பர்.

''உடைந்த அந்தப் பானைதான் முழுமையாக எனக்கு வேண்டும். வேறு பானை வேண்டாம்'' என்று அழுதார் பீர்பால்.

''உடைந்து நொறுங்கிய பானையை எப்படி மீண்டும் முழுதாக்க முடியும். வழி இல்லையே. என்ன செய்வது?'' என்று குழம்பினார் அக்பர்.

''பீர்பால்! அழுது அடம் பிடித்தது போதும். குழந்தையைச் சமாதானம் செய்வது கடினம்தான் ஒப்புக்கொள்கிறேன்'' என்றார் அக்பர்.

## விளையாட்டிலும் வினைத்திறன்

உங்களுக்கு விளையாடுவதில் ஆர்வமா? படிப்பதில் விருப்பமில்லையா? அப்படியானால் விளையாட்டிலும் உங்கள் படிப்பை வளர்க்க வழியொன்று காண்போமா?

இதோ! இப்படி வாருங்கள். உங்களுக்கான விளையாட்டொன்று.

ஒரு இடத்தை மறைத்துத் திரையிட்டுக் கொள்ளுங்கள். ஒரு புறத்தில் நடப்பது மறுபக்கம் தெரியக்கூடாது. சரிதானே. இப்பொழுது போட்டியாளர் இருவரைத் தெரிவுசெய்வோம். ஒருவர், ஒலியுண்டாக்கக்கூடிய செயல்களை ஒருபுறத்தில் செய்ய, மறுபுறத்தில் உள்ளவர் அந்த ஒலியின் தன்மையைக் குறிப்பிடவேண்டும். உதாரணமாக - பாத்திரம் ஒன்றை நிலத்தில் போடுதல், நாணயத்தை நகர்த்தல், கையினால் ஏதாவது பொருளில் தட்டுதல், இப்படி தமது விருப்பத்தின்படி சில ஒலிகளை எழுப்பலாம். இவற்றை எதிர்த்தரப்பாளர் இனங்கண்டு கூறவேண்டும். எப்படி இருக்கிறது?

நீங்கள் படிக்காமல் விளையாடுபவர்களாக இருந்தால், இனிப் படித்துக்கொண்டு விளையாடுபவர்களாக மாறிவிடமல்லவா?

## சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| சர்வதேச மகளிர் தினம் | - மார்ச் 08 |
| உலக நுகர்வோர் தினம் | - மார்ச் 15 |
| உலக சுகாதார தினம் | - ஏப்ரல் 07 |
| உலக செஞ்சிலுவை தினம் | - மே 08 |
| உலக தொலைத்தொடர்பு தினம் | - மே 17 |
| உலக கூட்டுறவு தினம் | - ஜூலை 01 |
| உலக சனத்தொகை தினம் | - ஜூலை 11 |
| உலக சமாதான தினம் | - செப்ரெம்பர் 18 |
| உலக தபால் தினம் | - ஒக்ரோபர் 09 |
| உலக எயிட்ஸ் தினம் | - டிசம்பர் 01 |
| உலக மனித உரிமைகள் தினம் | - டிசம்பர் 11 |

ந.ஜீவன்,
தரம் - 10,
யாழ்/சென்ஜோன்ஸ் கல்லூரி

## நாடுகளும் பண அலகுகளும்

| நாடுகள் | பணஅலகு |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்க குடியரசு | - யூ.எஸ்.டொலர் |
| 2.ஐக்கிய இராச்சியம் | - ஸ்ரேலிங் பவுண் |
| 3.பிரான்ஸ் | - பிராங் |
| 4.ஜேர்மனி | - டொயிஸ்மார்க் |
| 5.ஆஸ்திரியா | - சிலிங் |
| 6.சுவிஸ்லாந்து | - சுவிஸ்பிராங் |
| 7.சுவீடன் | - குரோனர் |
| 8.ஸ்பானியா | - பெஸ்டா |
| 9.நெதர்லாந்து | - கில்டர் |
| 10.போர்த்துக்கல் | - எஸ்கியூடா |
| 11. இத்தாலி | - லீரா |
| 12. பெல்ஜியம் | - பிராங் |
| 13. சவுதிஅரேபியா | - சவுதிறியால் |
| 14. இந்தியா | - ரூபாய் |

ந.அபிராமி,
தரம் - 4,
யாழ்/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## பெரும் பாலைநிலங்களும் நாடுகளும்

| | |
|---|---|
| சஹாரா | - வடஆபிரிக்கா |
| லிபியா | - வடஆபிரிக்கா |
| அரேபியன் | - அரேபியா |
| கோபி | - மங்கோலியா |
| கலஹாரி | - போஸ்வானா |
| பெருமணல் | -சீனா |
| கராகும் | - தென்மேற்கு துருக்கிஸ்தான் |
| கிஸில்கும் | - மத்தியது ருக்கிஸ்தான் |
| தார் | - வடமேற்கு இந்தியா |
| விக்டோரியா | - ஆஸ்திரேலியா |

கு.பிரதாப்,
தரம் - 4,
யாழ்/வேலணை மேற்கு நடராஜ வித்தியாலயம்

## உங்களுக்குத் தெரியுமா?

- மனிதனுடைய வாய் நாளொன்றுக்கு 2தொடக்கம் 3 பைந்துகள் வரையான எச்சிலை உண்டு பண்ணுகிறது.
- உலகத்திலுள்ள 26 நாடுகளில் கடற்கரைகளே கிடையாது.
- நாம் புன்னகை செய்வதற்கு 17 தசைநார்களும் வெறுப்பைக் காட்டுவதற்கு 43தசைநார்களும் தொழிற்படுகின்றன.
- மண்ணை ஸ்கொட்லாந்திலிருந்தும் ஒட்டகங்களை வடஆபிரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யும் நாடு சவூதி அரேபியா
- மற்றெல்லாத் திரவங்களையும் விட, மிக அதிகமான பொருட்களைத் தண்ணீரே கரைத்துவிடுகிறது.
- துள்ளவோ, பாயவோ முடியாத மிருகம் யானை. அதன் உடலமைப்பும், தசைநார் இயக்கமும் அதைச் செய்ய அனுமதிக்காது. யானையால் நடக்க மட்டுமே முடியும். ஒரு மனிதன் வேகமாக ஓடுவதை விட நடப்பதில் வேகம் காட்டுவது யானை. நீங்கள் ஓடும் போது அது துரத்துவதாக இருந்தால்,வேகமாக நடந்து வருகிறது என்பதே அர்த்தமாகும்.
- உலகில் மிகப்பாரிய "Tsar Kolokol Bell" என்ற மணி மொஸ்கோ நாட்டிலுள்ளது. 19 அடிஉயரமும், 24 அங்குலத் தடிப்பும், 216 தொன்கள் நிறையுமுள்ள இந்த மணி, 1733ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. பின்னர் 1836 இலிருந்து கிரெம்ளின் நகரில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- ஒரு கிளாஸ் துண்டு உடையும் போது அதன் நகர்வு வேகம் மணிக்கு 4,800 கி.மீற்றர்களாகும்.

## தபால் தகவல்கள்

- உலகில் 700, 000 இற்கும் அதிகமான தபால் அலுவலகங்கள் உள்ளன.
- உலகெங்கிலும் 6.2 மில்லியன் தபால் சேவகர்கள் தபால் விநியோகத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.
- வருடாந்தம் 400 பில்லியன் கடிதங்கள் பரிமாற்றத்திற்காக கொண்டு செல்லப்படுகின்றன.
- 1840, மே1 இல் பிரிட்டனின் தலைமைத் தபால் நிலையத்தால் பென்னி பிளாக் (Penny Black) என்ற பெயரில் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்டது.
- விக்டோரியா மகாராணியின் தலை பொறிக்கப்பட்ட அந்த முத்திரை பல லட்சம் பிரதிகளாக அச்சிடப்பட்டன.
- வீதிகளுக்கான இலக்கங்கள் பொறிக்கப்படுதல் முதன்முதலாக 1463இல் பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரிஸில் ஆரம்பிக்கப்பட்டது.
- தபால்களைச் சேகரிக்கும் தபால் பெட்டிகள் முதலாவதாக லண்டனிலுள்ள பாரிஸ்டன் வீதி மற்றும் பிளீட் வீதி மூலைகளில் 1855ம் ஆண்டு நிறுவப்பட்டன.

## நாடுகளும் நாடாளுமன்றங்களும்

| | |
|---|---|
| 1. இத்தாலி | - செனட் |
| 2. இலங்கை | - நாடாளுமன்றம் |
| 3. இந்தியா | - லோக்சபா |
| 4.சுவிற்சர்லாந்து | - நஷனல் அசெம்பிளி |
| 5. தாய்வான் | - யுவான் |
| 6. அமெரிக்கா | - காங்கிரஸ் |
| 7. டென்மார்க் | - போகெஸ்றில் |
| 8. பிரித்தானியா | - கொமன்சபை |

செ.சுஜாதா, தரம் - 11,
யா/யூனியன் கல்லூரி



# உங்கள் கைவண்ணம்




க.வரோதயன்,
தரம் - 8,
யா/சந்திரமௌலீசா வித்தியாலயம்.


ப.அன்ரன் ராஜ்குமார்,
தரம் - 7,
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை.


இ.சாளக்ஷன், தரம் - 1,
யா/அச்சுவேலி புனித இரேசா மகளிர் கல்லூரி.


அ.மக்லின்,
தரம் - 7,
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை.


செ.டஷாலினி,
தரம் - 6,
யா/உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை.



பி.லக்ஷினி, தரம் - 6
யா/பன்னாலை சேர் கனகசபை
அ.த.க.பாடசாலை.


## றோசாப்பூ

சின்னச் சின்ன றோசாப்பூ
சிவப்பு வெள்ளை றோசாப்பூ
வண்ண வண்ண றோசாப்பூ
வாட்டமில்லா றோசாப்பூ

வட்டமான றோசாப்பூ
வளர்ந்து நிற்கும் றோசாப்பூ
பட்டுப் போன்ற றோசாப்பூ
பார்த்து மகிழும் றோசாப்பூ

இனிய காலை நேரம்
இதழ் விரித்துச் சிரிக்கும்
மணி மணிகள் கூட
பல பலக்கும் கண்ணில்

முள்ளு வேலிக்குள்ளே
முகத்தைக் காட்டும் றோசாப்பூ
பள்ளுப் பாடி வண்டு
பாசம் கொள்ளும் றோசாப்பூ.



சி.லக்ஷினி, தரம் - 6,
யா/பன்னாலை சேர்கனகசபை
அ.த.க பாடசாலை

## மலைக்காட்சி

ஆதவன் மலைகளிடையே எழுந்திட
சூரிய காந்தி மலர்ந்ததே
மலையிலுள்ள அருவிகளும்,பச்சைக் கொடிகளும்
சூரியனை வரவேற்க சின்னஞ்சிறு - குருவிகள்
கீதம் இசைக்க, சூரியன் வரவைக் காத்திருந்த
மலைப்பூக்கள் மெருகேசிக்க, சூரியன்
மலையின் மேல் வருகின்றதே
இனிதே கண்டேன் மகிழ்வுடனே.

பா.லதீபி, தரம் - 10,
யா/பெரியபுலம் ம.வி

## எறும்பே நில்


ஓடும் எறும்பே நில்... நில்
ஓடி விளையாடச் சொல்... சொல்
ஊரும் எறும்பே நில்... நில்
உழைத்து வாழச்சொல்... சொல்
சின்ன எறும்பே நில்... நில்
சேர்ந்து பழகச் சொல்... சொல்
சுடிக்கும் எறும்பே நில்...நில்
சுறுசுறுப்பை நமக்குச் சொல்... சொல்

ஜெ.நிசாந்தன், தரம் - 10,
யா/பத்திரிசியார் கல்லூரி.


# புத்திவள்ள கோமாளித்தனம்



கோபாலு என்பவன் தனது தந்தையாரின் ஆத்ம சாந்தி இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவதற்காக புனித இடமொன்றை நாடி நீண்ட பயணமொன்றை மேற்கொண்டிருந்தான்.




புனிதமான அந்த ஆற்றங் கரையில் பூசாரியொருவர் கோபாலுவின் தந்தைக்கான பூசைக் கடமைகளைச் செய்ய ஆரம்பித்தார். அந்தப் பூசாரி திடீரென்று உனது தந்தையார் எனக்கு ஐநூறு ரூபாய்களைத் தர வேண்டியிருக்கிறதே! என்றார்.




உங்களுக்குரிய பணத்தை நாளையதினம் உங்கள் வீட்டு வாசல் படியருகில் பெற்றுக் கொள்வீர்கள் என வாக்களித்தான். அதன் பின்னர் எங்கெல்லாமோ அலைந்து திரிந்து பலாக்கொட்டைகள் பலவற்றைப்பொறுக்கியெடுத்து வைத்துக் கொண்டான்.



மறுநாள் அவைகளைச் சாக்குப் பையில் போட்டுக் கொண்ட கோபாலு, பூசாரியின் வீட்டை நோக்கி நடையைக் கட்டினான்.




அந்நேரம் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்து பார்த்த பூசாரிக்கு இந்தச் செய்கை ஆச்சரியத்தையும், வெறுப்பையும் கொடுத்தது. இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய் என அதட்டினானர்.



இவைகளெல்லாம் மரங்களாக வளர்ந்து உங்களுக்குப் பலாக் காய்களையும், பலாப்பழங்களையும் இலவசமாகத் தரப்போகிறது என்ற கோபாலுவை நோக்கி, "அப்படி யென்றால் என்ன?" என்றார் பூசாரி.






"அதைக் கொடுத்துவிடு இல்லையேல் அவருக்கான சடங்குகளை என்னால் நிறைவேற்ற இயலாது போய் விடும்" கோபாலு அதைக்கேட்டு திகைப்படைந்தான். ஆனாலும் அந்தச் சடங்கை நிறுத்திவிட அவன் விரும்பவில்லை.



பூசாரியின் வீட்டையடைந்தவுடன், வீட்டு வாசலுக்கு முன்னாலுள்ள முற்றத்தில் அந்தப் பலாக் கொட்டைகளை மண்ணைத் தோண்டி விதைக்க ஆரம்பித்தான்.



நீங்கள் பலாக்காய்களையும், பலாப்பழங்களையும் விற்பதால் தந்தையாருக்குக் கொடுத்த கடனைப் பார்க்கினும் பன்மடங்கு அதிகமான பயனைப் பெறப் போகிறீர்கள். உங்கள் வீட்டு வாசலருகில் பணத்தை ஒழுங்கு செய்வதாக வாக்களித்திருந் தேனல்லவா? அதை நிறைவேற்றி விட்டேன் என்றான்.

# தாதிச் சுறாக்கள்

மேற்கு அத்திலாந்திக் கடல் மற்றும் கிழக்கு பசுபிக் சமுத்திரங்களில் வாழும் இந்தத் தாதிச் சுறாக்கள் பகல் வேளைகளில் கடலில் ஆழப் பகுதிகளில் கூட்டமாகப் படுத்து உறங்கியும், இரவில் கடலின் மேல் மட்டத்தையடைந்து அங்கு காணப்படும் சிங்கி இறால், நண்டுகள், கடல் நத்தைகள் போன்றவற்றை உண்கின்



றன. அதேபோல ஆழ்கடலில் காணப்படும் ஓடுகளால் மூடப்பட்ட கடற்பிராணிகள், பெரிய மீன்கள், ஒக்டபஸ் என்ற நட்சத்திர மீன்கள், கடற்பவளப்பாறைகள் ஆகியவற்றையும் உண்ணும். 12 தொடக்கம் 14 அடிகள் வரை நீளமான இச்சுறாக்களுக்கு எவரும் சினத்தை உண்டாக்காதவரை எவருக்கும் தீங்கிழைக்காது. பருத்த உடல், மிகப்பலமான தாடைகள், பரந்த தலைப்பகுதி, இதற்குண்டு மூக்குத்துவார முன்பகுதியின் கீழ்ப்புறத் தாடையில் உள்ள மென்மையான தசைப்பாகங்கள் தொடுதல், ருசிபார்த்தலை உணர்த்துகின்றன. மூச்சுவிட உதவும் நீளவட்டப்பகுதிகள் மிக நெருக்கமாக உள்ளன. இதற்கு அப்பெயர் எப்படி வந்ததென்பது தெரியாது. ஆனால், சிறுகுழந்தைகளைப் பராமரிப்பது போன்ற உறிஞ்சுதல், அணைத்தல், சத்தங்கள் எழுப்புவதால் அப்பெயர் வந்திருக்கலாம். அதன் கண்களுக்கப் பின்னால் திருகு போலச் சுழன்று, வளைந்து செல்கிற பாதையும் சுறாக்கள் உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் வேளையில் மூச்சுவிடுவதற்காக உள்ளிளுக்கும் நீரை வெளியே எடுப்பதற்கும் பயன்படுகிறது.

இதன் தோல் இருண்ட சாம்பல் பழுப்பு. மற்றைய சுறாக்களைக் காட்டிலும் இதன் இளம் சுறாக்களைத் தொடும் போது மிக மென்மையாக இருக்கும். விசிறி போன்ற தோற்றத்தில் ஆயிரக் கணக்கில் அரம் போன்ற பற்களும், வீழ்ந்து விட்டால் மீண்டும் அதே இடத்தில் முளைக்கக் கூடியதாகவுமுள்ளன. கடின ஓடுகளாலான உயிரினங்களை நசுக்கி உண்ணவல்ல வரிசை ஒழுங்கிலமைந்த பற்களும் உள்ளன. வயது சென்றுவிட்டால் விழும் பற்கள் மீண்டும் முளைப்பதில்லை.

சூடான நீர் நிலைகளை விரும்பும் இவை கடல் மேல் மட்டத்திலிருந்து 230 அடி (70மீற்றர்) ஆழத்துக்குச் செல்கின்றன.

நமது ஈழநாடு

வைர வரிகள்

கண்ணோட்டம் இல்லவர் கண்இலர் கண்உடையார
கண்ணோட்டம் இன்மையும் இல்.
திருக்குறள்.

## நமது நோக்கு

### தமிழர்பக்க நியாயத்தை ஒலிக்கும் குரல்கள்

'ஈழத்தின் இனப்பிரச்சினை காரணமாக மனம் குமுறி நிற்கும் 6 கோடி தமிழ்மக்களின் உணர்வுகளை இந்திய அரசு உதாசீனப்படுத்திவிடமுடியாதென்ற உண்மையை- இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புரிந்துகொள்வதைப் பொறுத்தே இரு நாடுகளினதும் உறவுகளின் எதிர்காலம் அமையமுடியும்'.

அது இந்தியாவின் முக்கிய தமிழ் நாளிதழான தினமணியின் ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கிய விடயமாகும்.

'கூட்டாட்சி முறையே பரிகாரம' என்ற தலைப்பில் வெளயாகயுள்ள ஆசிரியர் தலையங்கம் சில செய்திகளை சிங்கள ஆட்சியாளர்களுக்கும், ஏனைய பேரினவாத கட்சிகளுக்கும் மட்டுமல்ல சர்வதேச சமூகத்துக்கும்கூட தெளிவாகவே கூறியுள்ளதெனலாம்.

ஜனாதிபதி மகிந்தவின் ஒற்றையாட்சிக் கோட்பாட்டை முற்றாகவே நிராகரிக்கும் இந்த ஆசிரியர் தலையங்கம் - ஒற்றையாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பகிர்ந்துவழங்குவதன்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற 'மகிந்தவின் சிந்தனை'யின் வெளிப்பாடான பழைய பல்லவியைப் பாடத்தொடங்கியிருக்கிறார் என்று வர்ணித்துள்ளதுடன், இது அவரது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி.யின் கொள்கை எனவும் கூறியுள்ளதுடன் -

ஒற்றையாட்சி அரசியல் கட்டமைப்புக்குள் இனப்பிரச்சனைக்குத் தீர்வு என்பதற்கு என்ன அர்த்தம்? பெரிய இனமாகிய சிங்கள இனத்தின் ஆதிக்கத்தின் கீழ் தமிழர்கள் வாழவேண்டும் என்பதல்லாமல் வேறென்ன? பிறகு எப்படி இலங்கையின் அரசியலிலும், ஆட்சியிலும் பல்வேறு துறைகளிலும் ஜனநாயக அடிப்படையில் தமிழர்களுக்கு உரிய பங்கு கிடைக்கமுடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.

நயாயமாக எழுப்பப்பட்டுள்ள இந்தக் கேள்விகள் இன்றைய சிறிலங்கா ஆட்சித் தலைமைக்கு மகிழ்ச்சியூட்டும் விடயமாக இருக்கப்போவது கிடையாது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' என்ற பழமொழிக்கேற்ப மகிந்தரின் இந்திய விஜயமும், அவரது பேச்சும், இந்தியாவிடமான அவரது எதிர்பார்ப்புகளின் உள்நோக்கமும் நீறுபூத்த நெருப்பாக இருந்த தமிழகத்திற்கும் - ஈழத்தமிழ் மக்களின் நெருக்கடிகளுக்குமிடையிலான உயிரார்ந்த உணர்வு நிலையை சுவாலைவிட்டு எரியவைத்துள்ளது எனலாம்.

1987 இல் அப்போதைய இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சதித்திட்டத்தின் உள்நோக்கம் அறியாத அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி - அவருடன் கைச்சாத்திட்ட இலங்கை - இந்திய உடன்பாடும், அதனையடுத்த இந்தியப் படைகளின் வருகையும், அதன்பின்னர் அடுக்கடுக்காக நடந்த சம்பவங்களும், சிங்கள ஆட்சித் தலைமைகளுக்கு தித்திப்பானதாக அமைந்தன. அதுவே இந்திய - ஈழத்தமிழ் மக்களிடையேயான தொப்புள்கொடி உறவைப் பாதித்த விடயமுமாயிற்று.

1987 இல் இருந்து - மகிந்த ராஜபக்ஷ அவர்களின் இந்திய விஜயம்வரை நிலவிய இந்திய மக்களுக்கும் ஈழத்தமிழ மக்களுக்கும் இடையிலான 'தானாடாவிட்டாலும் சதையாடும' ஆத்மார்த்தமான உணர்வு நிலையின் மௌனம் கலையத்தொடங்கியுள்ளது.

மண்டும் ஒரு தடவை இந்தியாவுக்கு இலங்கை அரசு விரிக்க முயலும் பொறிவலைக்குள் வீழ தாம் தயாரில்லை என்பதை இந்தியா புரிந்துகொண்டுள்ளமை வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது.

தமிழ்மக்களின் போராட்டத்தை பயங்கரவாதமாகப் பிரசாரப்படுத்திக்கொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்குள் இந்திய நலனைப் பாதிக்கும் வகையிலான சக்திகளை இலங்கை அரவணைக்கத் தொடங்கியுள்ளமையால் ஏற்படக்கூடிய எதிர்கால விபரீதங்களை இந்தியா உணராமலில்லை.

ஆனாலும், இன்றைய சூழல் - சர்வதேச அரசியல் இராணுவ நிலைமைகள் இந்தியாவை இவ்விடயத்தில் தீவிர கவனம் கொள்ளவைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

கிட்டத்தட்ட ஒன்றரை தசாப்தமாக மௌனம் காத்து, பல்வேறு சூழல்களின் அழுத்தங்கள் காரணமாகத் தம் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தமுடியாது புழுங்கிக்கொண்டிருந்த தமிழகம் - இப்போது தமது எண்ணங்களை வெளிப்படுத்தத் துணிந்துள்ளமையானது- நீதியின் குரலாக வெளிப்படத் தொடங்கியுள்ளது.

இது மகிந்தர் மட்டுமல்ல ஜே.வி.பியினரும், ஹெல உறுமயவினரும் எதிர்பார்க்காத மாற்றமாகும். இப்போது அவர்கள் தமது சுயத்தை - அதாவது, இந்தியா தொடர்பான தமது உண்மைக் கொள்கைகளை மெல்ல மெல்ல வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளமை அதன் எதிரொலியேயாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.cczhanaadu.com

## நாடும் நடப்பும்




# கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை



கலைஞன் தானாகவே உருவாகின்றான். அவனது கலைப்படைப்புகள் காலத்தால் அழிக்கப்படாத கருவூலங்களாக நிலைக்கும். எமது மண்ணில் கலைக்காகத் தம்மை அர்ப்பணித்து, உண்மையாக உறுதியாகச் சேவை செய்து வரும் ந.செல்லத்துரை என்ற கலைஞன் நவாலியூரில் பிறந்தார்.

1951 ஆம் ஆண்டில் இருந்து கலைப்பணியை ஆரம்பித்திருக்கும் இவர் நாடகங்கள், திரைப்படங்கள், நாவல்கள், சிறுகதைகள், சிந்துநடைக் கூத்து, கவிதை, மெல்லிசைப் பாடல்கள், வானொலி நாடகங்கள் எனப் பல துறைகளில் ஒளிவீசியவர்.

நாடகத்துறையில் சரித்திரம், இலக்கியம், புராணம், சமூகம் என நூற்றுக்கும் மேற்பட்ட நாடகங்களில் பரிணமித்துள்ளார். இவை கண்டி , மாத்தளை, நாவலப்பிட்டி போன்ற மலைநாட்டுப் பிரதேசங்களிலும், கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பரந்தன், வன்னி என தமிழர்கள் நிறைந்து வாழும் பகுதிகளிலும் மேடையேற்றப்பட்டிருக்கின்றன.

இவர் மேடை ஏற்றிய சமூக நாடகங்களாக சீதனம், வாசல், உண்மைகள் ஊமையாவதில்லை, தீர்மானம், ஜீவவெளிச்சம், அன்பு இல்லம், பட்டமரம், குடும்பங்கள் பலவகை இது ஒரு வகை, எங்கள் கிராமத்தின் இந்தக் கோலங்கள் போன்றவை பலரின் சிந்தனையைக் கவர்ந்த நாடகங்கள் என்றால் மிகையாகாது.

இதேபோல சரித்திர, இலக்கிய, புராண நாடகங்களான கண்டியம்பதிக் காவலன், தாய்நாடு, மயானங் காத்த மன்னன், வித்தியா இது சரியா, நீதி கேட்டாள் சோழ நாட்டாள் போன்றவை புகழ்பெற்ற நாடகங்களே.

'உலகம் எங்கள் கைகளிலே" என்ற நாடகந்தொகுதியை நூலாக வெளியிட்டு தமிழில் நாடக நூல்கள் இல்லாத குறையைப் போக்கியவர். நாடக நூல்கள் சில பிறரால் வெளியிட்டபோதும், அவை படிப்பதற்குரியனவேயன்றி நடிப்பதற்குரியனவாக அமையவில்லை. இவர் ஒரு சிறந்த நடிகர் என்பதாலும் மேடை அமைப்பு, காட்சி அமைப்பு போன்ற மேடை அனுபவங்கள் பெற்றவர் என்பதாலும் இவரது நாடகங்கள் மேடையில் நடிப்பதற்கு ஏற்றனவாக அமைந்திருக்கின்றன.

கூத்துக்கலை எமது தமிழர்களின் பாரம்பரியக் கலைச் செல்வங்களில் பிரதானமானதும், செழுமை மிக்கதுமாகக் கருதப்படுகின்றது. மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு இதன் தொட்டில்களாகத் திகழுகின்றன. நவீன நாடகங்களின் வருகை கூத்துக் கலையை நகரப் பகுதிகளிலிருந்து ஓரங்கட்டி ஒதுக்கி கிராமப் புறங்களுக்குத் தள்ளிவிட்டது. படிக்காத பாமரர்களின் கலையாகக் கருதப்பட்ட இந்தக் கலையை மீண்டும் தலையெடுக்க வைத்த நவாலியூரானின் சிறந்த முயற்சியில் உருவாகிய "சின்னவனா பெரியவனா" சிந்துநடைக் கூத்திலே தாவீது - கோலியாத் கதை சிறப்பாக அமைந்துள்ளது. இந்தக் கூத்தில் வரும் பாடல்கள் ஆசிரியரின் எண்ணக் குமுறல்களையும், எமது நாட்டின் இன்றைய துன்பங்களையும் அடக்குமுறைகளையும் எடுத்துக் கூறுகின்ற விதம் சிறப்பாக அமைந்துள்ளது.

1968 ஆம் ஆண்டில் " முகை வெடித்த மொட்டு" என்ற நாவலை எழுதினார். இந்த நாவலுக்கு சாஹித்திய மண்டலப் பரிசைப் பெற்றார். இவரின் சிறுகதைகள் சஞ்சீவி, தினகரன், மலைமுரசு, முத்தமிழ் முழக்கம் ஆகிய பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

1976இல் இலங்கையில் தயாரிக்கப்பட்ட "காத்திருப்பேன் உனக்காக" என்னும் திரைப்படத்துக்கு திரைக்கதை வசனம் எழுதியதுடன் சிவகுமார் என்ற பெயருடன் இந்தப் படத்தில் தந்தையாகப் பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இந்தத் திரைப்படம் இலங்கையில் உள்ள பல்வேறு திரை அரங்குகளில் திரையிடப்பட்டது. யாழ். வின்ஸர் தியேட்டரில் ஐம்பது நாட்கள் ஓடி வெற்றிப்படம் என்ற பெருமையையும் இது பெற்றுக் கொண்டது. வசனங்கள் கருத்தாழம் மிக்கவை. சில வசனங்கள் ரசிகர்களின் மனதில் ஆழப்பதியக் கூடியனவாகும்.

1987ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட "பூதத்தம்பி" வீடியோப்படத்திலும், நவாலியூரான் பங்கு கொண்டார். இந்தப் படத்தில் வரும் நடனப் பாடல்கள் நவாலியூரானின் ஆக்கங்கள், பூலோகசிங்கம் என்ற பாத்திரமேற்று நடித்தார்.

நாடகங்களைப் பழக்குவதிலும், உரையாடல்களை சூழ்நிலைக்கேற்றவாறு பேசப்பழக்குவதிலும் வல்லவரான இவருக்கு யாழ் மதுரகான சபாவினர் "நடிப்பிசைத்திலகம்" என்னும் பட்டம் கொடுத்து கௌரவித்தனர். கண்டி நாட்டில் இவர் ஆற்றிய கலைச் சேவையைப் பாராட்டி கண்டிய மக்கள் பெருவிழா வெடுத்து கலையரசு சொர்ணலிங்கம் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

எழுபத்தைந்து வயதைக் கடந்து விட்ட இந்த முக்கால் கிழவன் இன்னும் இருபது வயது இளைஞன் போல் சுறுசுறுப்பாக ஓடியாடித் திரிவதைக் காண வியப்பாக இருக்கிறது. ஒன்றிரண்டு கலையாக்கங்களைச் சிருஷ்டித்துவிட்டு பெரிதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இன்றைய சமூகத்தில் எல்லாத் துறைகளிலுமே தனக்கென ஓர் முத்திரை பதித்த இந்தக் கலைஞன் எந்தக் கலைவட்டத்துடனும் சேராமலும், தனக்கென குழு சாராமலும் தனக்கே உரிய தனித்துவமான பண்புகளால் ஈழத்துத் தமிழிலக்கிய வானில் சிறந்த கலைஞராக ஒளிர்கின்றார். மென்மேலும் இவர் படைப்புகள் தமிழ்த்தாய் பூரிப்படைய கலாரசிகர்களும் வாசகப்பெருமக்களும், புளகாங்கிதம் கொள்ள கலாதேவி இக்கலைஞனுக்கு நீண்ட ஆயுளையும், தேகாரோக்கியத்தையும் கொடுத்தருள வேண்டிப் பிரார்த்தித்து,

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை நினைவு விருது 2005 இக்கலைஞனுக்கு வழங்கிக் கௌரவிக்கின்றோம்.

நயினை-கிருஷ்ணசாமி கிருபானந்தா

# இந்த வாரம் உங்கள் பலன்கள் எப்படி? 06.01.2006 - 12.01.2006

| | | | |
|---|---|---|---|
| சந் ராகு | செவ் | | |
| புரே | 07 பி.ப 2-22 மே-சந் | | சனி |
| | 09 இ 8-44 இட-சந் | | |
| சுக் நெப் | 11 பி.கு 5-13 மிது-சந் | | |
| சூ-புத | புத | குரு | கேது |

## மேடம்

[அஸ்வினி,பரணி,கார்த்திகை 1 ஆம் கால்]

மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் ஏற்பட்ட வண்ணம் இருக்கும். பொருளாதார நெருக்கடி தோன்றும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். வரவிலும் பார்க்கச் செலவு கூடுதலாக இருக்கும். குடும்பப் பெண்கள் சமாளிக்க முடியாமல் திண்டாடுவர். தொடங்குங் கருமங்கள் தவிடு பொடியாகிவிடும். மங்கள கருமங்கள் கைகூடுவதில் இழுபறிகள் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். சமாளிப்பதற்கு உதவிகளும் கிடையாது. அதிகாரிகளும் சினந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். கறுப்புச் சந்தை வியாபாரிகள் பலன் பெறுவர். தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமை குலையும். வருவாய் குறைவாகக் காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## இடபம்

[கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2]

இடபராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பணவருவாய் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்தும் பண உதவிகள் கிட்டும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி வெற்றிபெறும். விவாகம் முதலிய மங்கள கருமங்கள் மனம் போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். பதவிஉயர்வு, கௌரவம் அதிகரிக்கும். அதிகாரிகள் பாராட்டுவர்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓகோ என்று சிறப்பாக நடக்கும். முதலீடுகள் விற்பனையாகும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் ஒப்பந்தமாகும். வருவாய் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், சிறப்பும் அடைவர். உயர் கல்வி கற்க வாய்ப்புகள் கிடைக்கும்.

## மிதுனம்

[மிருகசீரிடம்3,4திருவாதிரை,புனர்பூசம் 1,2,3]

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு நிலவினாலும் இடையிடையே கருத்து வேறுபாடுகளும் தோன்றும். பணவருவாய் தேவையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் உறவினர்களிடையிலும் மனஸ்தாபங்கள் காட்டும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவு பெறும். மங்கள கருமங்கள் தாமதத்தின் பின் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்களுக்கு பொறுப்புகள் அதிகமாயினும் சக உதவிகளுடன் செயற்படுத்த முடியும். ஊதிய உயர்வுகள் தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மட்டமாக இருக்கும். புதிய முயற்சிகளைக் கையாண்டு வியாபாரத்தை பெருக்கவேண்டும். தொழிலாளர்களுக்கு தொழில்கள் மட்டுப்படுத்தப்படும். எனவே வருமானம் குறையும். மாணவர்கள் தமது முயற்சிக்கேற்ப பலனடைவர்.

## கடகம்

[புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்]

கடகராசியில் பிறந்தவர்களுக்கு இல்லற வாழ்க்கை நன்றாக அமையும். பண வருவாய் திருப்திதரும். புத்திரர்களால் உதவிகள் கிட்டும். தேகசுகம் திருப்தியாக இருக்கும். நண்பர்கள் உறவினர்கள் உதவி செய்வர்கள். பிரயாணங்கள் நன்கு அமையும். விவாகம் முதலிய நற்கருமங்கள் நிறைவேறக்கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. உத்தியோகத்தர்களுக்கு வசதிகள் கிடைக்கும். தொழில்சார்பாக பிரயாணங்கள் கைகூடும். அதிகாரிகள் கௌரவமாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முதலீடுகளில் நல்ல லாபம் கிட்டும். வங்கி உதவிகளும் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு தொழில் வசதிகள் பெருகும். வருவாய் சிறக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னிலை வகிப்பர்.

## சிங்கம்

[ மகம்,பூரம், உத்தரம் 1 ]

சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் தோன்றும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். எக்கருமத்தையும் ஒழுங்காகச் செய்யமுடியாத தன்மை காட்டும். பொருள் வரவு பற்றாக் குறையாகவே இருக்கும். கடன் தொல்லைகளும் ஏற்படும். தேகசுகக் குறைவால் வைத்தியச் செலவும் அதிகமாகும். விவாக மங்கள கருமங்கள் காலவரையறையின்றி இழுபடும். போக்குவரத்தில் அலைச்சல்கள் காட்டும். எப்படித் தொழில் செய்தாலும் நற்பெயர் கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். முதலீடுகளுக்கு கையிருப்புகள் போதாமலிருக்கும். தொழிலாளர்களுக்கு எடுத்த ஒப்பந்தங்களை உரிய காலத்தில் முடிக்க இயலாத தன்மை ஏற்படும். மாணவர்கள் தேவையில்லாதவற்றில் தலையிடுவதைத் தவிர்க்கவும்.

## கன்னி

[உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2]

கன்னிராசில் பிறந்தவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்கள் இவ்வாரம் காட்டும். குடும்பத்தில் சுமுக நிலை காட்டும். தொழில் செய்வதில் பிரயாசை கூடுதலாக இருக்கும். பிரயாசைக்கேற்ற வேதனம் கிடையாது. உறவினர்களிடையே சில சந்தர்ப்பங்களில் கசப்புகள் ஏற்படலாம். எனினும் தெய்வ நம்பிக்கையும், விடாமுயற்சியும் நற்பலனைத்தரும். மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாயினும் சக உதவிகளுடன் சமாளிக்கலாம். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொண்டால் பலவற்றுக்கும் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபார முன்னேற்றத்தில் பிரயாசை அதிகம். வாடிக்கையாளர்களுக்கேற்ப நடந்து கொண்டால் விற்பனை சிறக்கும். தொழிலாளர்கள் தமக்குள் ஒற்றுமையைப் பேண வேண்டும். வெகுசிரமப்பட்டே தொழில்களை நிறைவேற்ற வேண்டியிருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் கடும் ஊக்கம் தேவை.

## துலாம்

[சித்திரை 3,4ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் கால்கள்]

துலாராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் மிகச் சிறப்பான பலன்கள் தென்படுகின்றன. குடும்பம் எப்பொழுதும் கலகலப்பாகவே இருக்கும். உறவினர்களின் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாராத பண வருவாய் கிடைக்கும். எடுத்த கருமங்கள் தங்கு தடையின்றி நிறைவேறும். புத்திரர்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமத்துக்கான பேச்சுகள் மனம் போல் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அரச கௌரவங்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்ச்சி கிட்டும். அதிகாரிகள் பாராட்டுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறக்கும். பழைய முதலீடுகள் விற்பனையாகும். பழைய கடன்கள் வசூலாகும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகள் கிட்டும். ஒப்பந்தங்களில் நிறையலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கு நல்ல முன்னேற்றமும், பாராட்டுக்களும் உண்டு.

## விருச்சிகம்

[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடக்கும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வர். பொருளாதாரம், பணவருவாய் திருப்தியளிக்கும். நண்பர், உறவினர்களின் உதவி உண்டு. மங்கள கருமங்கள் விரைவில் கைகூட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றங்கள் கிடைக்கலாம். சகஊழியர்களின் உதவியும் கிட்டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டு நல்ல வருமானத்தைப் பெறுவர். மாணவர்களுக்கு கல்வி சிறப்படையும். பல்கலைக்கழகப் பிரவேசம் கிடைக்கும்.

## தனுசு

[மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்]

தனுசு ராசியினர்களுக்கு குடும்பத்தில் அமைதி குன்றும். புத்திரர்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்வர். எதிர்பாராத பிரச்சினைகள் உருவாகும். வருவாயிலும் பார்க்க செலவு அதிகமாகும். தேகசுகக்குறைவால் வைத்தியச்செலவு கூடும். தொடங்குங் கருமங்கள் நிறைவேறாது. மங்கள கருமங்கள் காலந்தாழ்த்திக் கொண்டு போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைத் தலங்களில் பிரச்சினைகள் உருவாகும். அதிகாரிகளின் ஒத்துழைப்பு கிடையாது. வருவாய் பற்றாக்குறையாக இருக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சோபிக்காது. முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை குறையும். புதிய வேலைகள் கிடைப்பது கடினம். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறையும்.

## மகரம்

[ உத்தராடம் 2,3,4 ஆம் கால்கள் திருவோணம், அவிட்டம் 1,2]

மகரராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சுமுகமாக இருந்தாலும், இடையிடையே கருத்து வேற்றுமை காட்டும். பண வரவு தேவைக்குப் போதுமானதாக இருக்கும். வெளி நாட்டு உதவிகள் காலந்தாழ்த்திக் கிடைக்கும். தேகசுகத்தைப் பேணிக்கொள்வது நன்று. மங்கள கருமங்கள் தாமதமாகி நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாக இருப்பினும், சக உதவிகளுடன் சமாளிக்கலாம். ஊதிய உயர்வுகள் தாமதமாகக்கிடைக்கும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முயற்சிக்கேற்ப விற்பனை நடைபெறும். தொழிலாளர்களுக்கு தீவிர முயற்சியின் மேல் பயன் கிட்டும். கடின உழைப்பு தேவை. மாணவர்கள் ஊக்கத்துக் கேற்ப முன்னேற்றம் காண்பர்.

## கும்பம்

[ அவிட்டம் 3,4 ஆம் கால்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் கால்கள்]

கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வலுக்கும். புத்திரர்களால் உதவியும், மகிழ்ச்சியும் கிட்டும். பணவருவாய் திருப்தியாக இருக்கும். உறவினர்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். மங்கள கருமங்கள் விரைவில் நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய தொழில், இடமாற்றங்கள் கிடைக்கும். சக ஊழியர்களின் உதவியும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் கணிசமாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு புதிய தொழில் கிடைக்கும் வாய்ப்புண்டு. வருவாயும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டு. விஞ்ஞானத்துறை மாணவர்கள் கூடிய சித்தி பெறுவார்கள்.

## மீனம்

[ பூரட்டாதி 4 ஆம் கால் உத்தரட்டாதி, ரேவதி]

மீனராசியில் பிறந்தவர்களுக்கு அதிவிசேட பலன்கள் இவ்வாரம் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உறவினர்களின் வருகையால் வீட்டில் குதூகலம் நிறைந்து காணப்படும். பணவருவாய் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்தும் வருவாய் கிடைக்கும். தேகசுகம் சிறப்பாக இருக்கும். மங்கள கருமங்கள் மனம்போல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு பொதுமக்களின் பாராட்டுக்கள் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். மேலதிகாரிகளின் மதிப்பு உண்டு. வர்த்தகர்களுக்கு இறக்குமதி ஏற்றுமதிகளில் கூடிய வருவாய் கிட்டும். வியாபாரம் முன்னேற்றமடையும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தம் செய்யப்படும். வருவாயும் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் சித்தியும், பாராட்டுக்களும் உண்டு. சிலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

---

நீத்தார் பெருமை

## பிரதிமைக் கலை மாமணி கலா பூஷணம் இராசரத்தினம் நினைவாக...



மானுடக் கலைதந்த மகத்தான ஓவியர் பிரதிமைக் கலைமாமணி கலாபூஷணம் அமரர் க.இராசரத்தினம் யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த ஓவியர்களில் ஒருவர். ஓவியரின் எழுபத்தொன்பதாவது பிறந்த தினத்தை யொட்டியும், நான்காவது மாத நினைவையொட்டியும் இந்தக் குறிப்பு பிரசுரமாகின்றது.

ஓவியர் இராசரத்தினம் அவர்களது கலை வாழ்வில் குறிப்பிட்ட சில வருடங்கள் அவரோடு பழகக் கிடைத்த பொழுதுகள் மிக மிகப் பெறுமதியானவை, நேர்த்தியானவை. அவரின் சிந்தனையும், செயலும் எப்பொழுதும் ஓவியம், வர்ணம் இயற்கையின் விந்தை, இயற்கையுடன்கலைஞன்எவ்வாறான உறவை, எந்த வடிவத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை மையமாகக் கொண்டது.

'மானுடக் கலை நரம்பு வெடிக்கும் பிரச்சினைக்குரிய கலை. இது புகைப்படம் போல் அமையலாகாது. ஆக்க முறையில் அமைதல் வேண்டும்' எனக் கூறும் ஓவியர், இந்தக் கூற்றின் உண்மைத்தன்மையை நடுநிலையாக மதிநுட்பம் நிறைந்த கலைஞனாக நின்று விளக்கியுரைப்பதை பல தடவைகள் அவருடன்உடனிருந்தவகையில் அறிந்து கொண்டேன்.

ஓவியத்துறை சார்பாக பல்வேறு தளங்களில் இயங்கிவந்த ஓவியர் அரைநூற்றாண்டிற்கு மேலாக இந்தத் துறையுடன் தன்னை அர்ப்பணித்து செயலாற்றியவர். ஓவியர் விரிவுரையாளர்களுக்கு அப்பால் மிகத் திறமையான மானுடக்கலை கலைஞர். இவரது இழப்பு இந்தத் துறையில் பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

நவீன இலத்திரனியல் புகைப்படக் கருவிகளின் அதீத பாவனையும், நவீன ஓவியங்களின் மேலோங்கலும் அதிகரித்த இன்றைய காலப் பகுதியில் மானுடக் கலையின் அருமை பெருமைகளை நுணுக்கங்களை நன்குணர்ந்த கைதேர்ந்த ஓவியர் இவர்.


தன்மீது கொண்ட நம்பிக்கையாலும், மானுடக்கலையின் மீது கொண்ட பெருவிருப்பினாலுமே இதுவரை காலமும் தன் துறையுடன் இளமைத் தோற்றத்துடன் இயங்கியவர். பல உயிரோவியங்களை வரைந்து ஓவியத்தின் ஊடாக அவர்களுக்கு உயிர் கொடுத்த உத்தம கலைஞர் நிலக்காட்சி ஓவியங்களையும் வரைந்துள்ளார்.

ஓவியத்துறை சார்பாக மூன்று நூல்களை எழுதியுள்ள கலைஞர் பல்துறை ஆளுமையுள்ளவர், எழுத்தாளர், புகைப்படக்கலைஞர், விமர்சகர், நாடக ஆர்வலராக வாழ்ந்த கலைஞர் இந்தப் பரிமாணங்களினால் தன் இருப்புக்கு பல பதிவுகள் மூலம் அர்த்தமூட்டியவர்.

ஓவிய உலகில் பிரமிக்க வைக்கும் பல படைப்புக்களைத்தந்த மாபெரும் அபூர்வ கலைஞனின் ஓவியங்களும், ஓவியத்துறை சார்பான நூல்களும் நினைவழியா சான்றாக இருப்பதுடன், எதிர் கால ஓவியத்துறை சார்பானவர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆய்வுக்குரியதாகவும் இருக்கப்போவதும் உண்மையே.

இ.விஜேந்திரன்

# ரொய்ட்டரின் பார்வையில் பெண் புலிகள்



சர்வதேச செய்தி நிறுவனமான ரொய்ட்டர், தமிழீழ விடுதலைப்புலி பெண் போராளிகள் பற்றிய சிறப்புக் கட்டுரையை வெளியிட்டுள்ளது.

அதன் விபரம் வருமாறு -

5 அடி உயரம் உள்ள மாலதி என்ற பெண் விடுதலைப்புலிகளின் இயக்கத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பாக இணைந்தவர். தனது சக போராளிகளின் மரணம்தான் தன்னை வலுப்படுத்தியிருக்கிறது என்கிறார் அவர். மீண்டும் போரிட தாம் தயார் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளின் இராணுவச் சீருடையையும் பட்டியையும் அணிந்துள்ள அவரது இயக்கம் விடுதலைக்காக 20 ஆண்டுகளாக 2002 ஆம் ஆண்டு போர்நிறுத்தம்வரை போராடி வந்தது.

28 வயதான அந்தப் பெண்ணும் அவரது சக போராளிகளும் நோர்வே அனுசரணையுடனான பேச்சுக்களில் அமைதி உருவாகும் என்று நம்பினோம். ஆனால் அது நடக்காது என்கின்றனர்.

அமைதி முயற்சிகளூடாக தமிழ் மக்களுக்கு நன்மையும், விடுதலையும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம் என்று போராளிகளின் தலைமையகமான கிளிநொச்சியில் அவரைச் சந்தித்தபோது மொழிபெயர்ப்பாளர் உதவியுடன் எமக்குத் தெரிவித்தார். அந்த நகரம் விடுதலைப்புலிகளின் நடைமுறை அரசைக் கொண்டது. நீதிமன்றங்களும், காவற்துறைத் தலைமையகமும், அவர்களது சொந்த வங்கியும் அங்கே இயங்குகின்றன.

எதுவுமே இந்த அமைதி முயற்சிக் காலத்தில் நடக்கவில்லை என்பதை உணர்ந்துள்ளோம் என்கிறார் மாலதி. எமது தலைவர் தனது முடிவை மாற்றி எமக்குப் புதிய உத்தரவிட்டால் நாம் போரிட தயாராக இருக்கிறோம் என்றார்.

கடந்த நவம்பர் மாதம் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் 2006 ஆம் ஆண்டில் தனது விடுதலைப்போராட்டத்தைத் தொடங்க வுள்ளதாக அறிவித்தார்.

அதன் பின்னர் போராளிகளின் பகுதிகளைச் சுற்றி இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தமிழ் மக்கள் மீதான தாக்குதல்களுக்கு இராணுவம் மீது போராளிகள் தரப்புக் குற்றஞ்சாட்டி வருகிறது. இராணுவம் வன்முறைகளில் ஈடுபடுவதால் அதற்கெதிராக மக்கள் போராடி புதிய யுத்தம் உருவாகிறது என்கிறார்கள். ஏற்கனவே 64 ஆயிரம் பேர் யுத்தத்தால் உயிரிழந்துள்ளனர்.

ரொய்ட்டருக்குக் கடந்த புதன்கிழமை பேட்டியளித்த மாலதி மற்றும் 32 வயது ஜெயந்தி ஆகிய பெண் போராளிகள் இருவரும் முன்னணிப் போராளிகள். நாம் சந்தித்த 24 வயது நேசன் இதுவரை யுத்தத்திற்குச் சென்றதில்லை என்றார்.

ஆனால், முழு அளவிலான பயிற்சிகளைத் தாங்கள் பெற்றுள்ளோம் என்றும், ஏ.கே 47 ரக துப்பாக்கிகளைக் கையாளுதல், ஆர்.பி.ஜி ரொக்கெட் தாக்குதல்கள், மோட்டார் தாக்குதல்களை மேற்கொள்ளும் பயிற்சிகளைப் பெற்றிருப்பதாக மூவரும் கூறினர்.

தமது முதலாவது களம் மிக எளிதானதாக



இருந்தது என்கிறார் ஜெயந்தி. இவர் 1996 ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு கடலோரத்தை மீட்டெடுக்கும் சமரில் பங்கேற்றவர். நாங்கள் முழுத் தயார்படுத்தலுடனும், முழுப்பயிற்சிகளுடனும் இருந்தோம். அதனால் வெற்றிபெற்றோம். அதன் பின்னரான களங்கள் மிக எளிதாக இருந்ததில் திருப்தியும், மகிழ்ச்சியும் அளித்தது என்றார் ஜெயந்தி.

கடந்த காலங்களில் மரபுவழி மற்றும் தற்கொலைத் தாக்குதல்களுக்குப் பெண் போராளிகளைப் பயன்படுத்தியுள்ளனர். புதிய யுத்தம் தொடங்கினால் அனைத்து வளங்களையும் பயன்படுத்தப்போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

எம்மிடம் 18 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரையான போராளிகளை உள்ளடக்கிய தனித் தனி அணிகள் உள்ளன என்றும், இவர்களில் 35 விழுக்காட்டினர் இராணுவ அதிகாரிகள் என்றும் கூறினர்.

நேசன் கூறுகையில் -



நாம் அச்சப்படவில்லை. தேவைப்பட்டால் மரணிக்கவும் நாங்கள் தயாராகவுள்ளோம் என்றார். நான் சந்திக்கப் போகும் முதலாவது களம் கடினமானதாக இருக்கும் என்று கருதவில்லை. நான் முழுமையான தயார்படுத்தலோடு பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறேன். என்னையும், எமது போராட்டத்தையும் பாதுகாப்பாகவும் எமது மக்களின் விடுதலையும், உரிமையும் வென்றெடுக்கப்பட வேண்டும் என்கிற ஆத்ம பலத்தையும் நாம் பெற்றிருக்கிறோம் என்றார்.

நாம் இராணுவத்தினர் மீது அனுதாபம் காட்டவில்லை. அவர்களை மதிக்கவும் இல்லை. அவர்கள் வன்மம் கொண்ட கொலைகாரர்கள். அவர்கள் கண்ணில் பார்ப்ப வர்களையெல்லாம் கொலை செய்யவேண்டும் என்று மது போதையில் இருக்கின்ற வெறியர்கள் என்கின்றனர்.

எதிரியிடம் சிக்கி சித்திரவதைப்படாமல் இருக்கவும், சக போராளிகளுக்குத் துன்பம் நேராமல் இருக்கவும் தங்கள் கழுத்துகளில் சயனைட் குப்பிகளை அவர்கள் தொங்கவிட்டுள்ளார்கள். எமக்குப் பேட்டியளித்த எவருக்கும் திருமணமா



கவில்லை. யுத்தத்தில் வெல்லும்வரை எங்களுக்கு அதைப்பற்றிச் சிந்திக்க நேரமில்லை என்கின்றனர்.

மதுவும், புகைப்பிடிக்கும் பழக்கமும் போராளிகளிடம் தடை செய்யப்பட்டிருக்கிறது.

கிழக்குக் கடலோரத்தில் வசித்து வந்த தமது குடும்பத்தினர் மீது கட்டுக்கடங்காத வன்முறைகளைச் இராணுவம் மேற்கொண்டதால்தான் போராளியாக இணைந்தேன் என்கிறார் ஜெயந்தி. தமிழ் மக்களுக்கு எதிரான இராணுவ வன்முறைகளுக்காகத்தான் தானும் களத்திற்குப் போனதாகவும், இந்த வன்முறைகள் போர் நிறுத்த ஒப்பந்த காலத்திலும்கூட நீடிக்கிறது என்றார் மாலதி.

நாம் களத்துக்கு வந்ததிலிருந்து பல சக போராளிகளை இழந்துள்ளோம். அந்தப்



போராளிகளின் இழப்புத்தான் எமக்கு உறுதியை ஏற்படுத்தியுள்ளது. எமது மக்களைப் பாதுகாக்கத் தங்கள் உயிரை அர்ப்பணித்தவர்கள் அவர்கள். அதுதான் எங்களை மேலும் மேலும் போராடுவதற்கான சக்தியாக இருக்கிறது என்று அவர்கள் மேலும் கூறினர்.

(படங்கள் : ரொய்ட்டர்)

## தமிழ்நாட்டிலிருந்து போதைப்பொருள் கடத்த முயன்ற இலங்கைத்தமிழ் இளைஞருக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிப்பு

புதுக்கோட்டை—

சென்னையிலிருந்து திருச்சி வழியாக இலங்கைக்கு ரூபா 11.36 கோடி மதிப்பிலான கெரோயின் போதைப்பொருள் கடத்த முயன்ற வழக்கில், இலங்கை இளைஞருக்கு 11 வருட சிறைத்தண்டனை விதித்து புதுக்கோட்டை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிக்குப் போதைப்பொருள் கடத்தப்படுவதாகக் கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் சுங்கப் பொலிஸார் திருச்சி விமானநிலையத்தை முற்றுகையிட்டு அதிரடிச் சோதனை நடத்திய போது, காரில் சந்தேகத்திற்கிடமான முறையில் தப்பிச்செல்ல முயன்ற இளைஞர் ஒருவரைப் விமான நிலையம் அருகிலுள்ள சோதனை நிலையத்தில் மடக்கிப் பிடித்தனர்.

அந்த இளைஞர் வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஸ்ரீ என்று அழைக்கப்படும் வெற்றி முரசு வெற்றிச்செல்வம் (வயது - 33) என்பது தெரியவந்தது. தொடர்ந்து சுங்கப் பொலிஸார் அவர் தப்பிச்செல்ல முயன்ற காரைச் சோதனை செய்தனர். இதில் 11.35 கிலோ ஹெரோயின் போதைப்பொருள் மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் சர்வதேச மதிப்பு 11.36 கோடி ரூபாவாகும்.

வெற்றிச் செல்வத்தைக் கைதுசெய்த பொலிஸார் நடத்திய தீவிர விசாரணையில் அவர் சென்னையிலிருந்து திருச்சி வழியாக இலங்கைக்குக் ஹெரோயின் கடத்த முயன்றது தெரியவந்தது. வெற்றிச் செல்வம் மீது போதைப் பொருள் கடத்த முயன்றதாகப் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து திருச்சி சிறையில் அடைத்தனர்.

கடந்த 2004 ஜனவரி 31 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவம் குறித்த வழக்கு புதுக்கோட்டை முதன்மை மற்றும் அத்தியாவசிய பண்டங்கள் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி பாலச்சந்திரகுமார் குற்றம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதால் மேற்படி இளைஞருக்கு 11வருட கடுங்காவல் சிறைத் தண்டனையும், ரூபா 1 லட்சம் அபராதமும் விதித்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார். அபராதம் கட்டத் தவறினால் மேலும் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈராக் குண்டுவெடிப்பில் 120 பேர் உயிரிழந்தனர்

கர்பலா

ஈராக்கில் இரண்டு இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 120 பேர் உயிரிழந்தனர். 200 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈராக் நாட்டின் முக்கிய நகரங்களான கர்பலா மற்றும் ரமாதியில் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் மனித வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர். இந்தத் திடீர் தாக்குதலில் சிக்கி ஏழு அமெரிக்க வீரர்கள் உட்பட 120 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். சம்பவம் நடைபெற்ற இடம் முழுவதும் ரத்த வெள்ளமாகக் காட்சியளித்தது. இது தவிர, ஈராக் தலைநகர் பாக்தாத்திலும் மூன்று இடங்களில் நேற்றுமுன்தினம் குண்டுகள் வெடித்தன.

உலக நோக்கு

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கடல் தாமரை கைப்பற்றப்பட்டது



இராமநாதபுரம்—

கீழக்கரையில் இருந்து இலங்கைக்குக் கடத்தவிருந்த ரூபா. இரண்டு லட்சம் மதிப்புள்ள அரியவகை கடல் தாமரையை உயிருடன் சுங்க அதிகாரிகள் கைப்பற்றினர்.

மன்னார் வளைகுடா பகுதியில் தடை செய்யப்பட்ட அரியவகை சீஅனிமோன் என்ற கடல் தாமரை கீழக்கரைப் பகுதியில் அதிகம் உள்ளது. இவைகள் பாறை இடுக்குகளில் காணப்படும். இது மருத்துவத்துக்குப் பயன்படுத்துவதால் இலங்கை வழியாக சிங்கப்பூர், மலேசியா ஹொங்கொங், தாய்லாந்து போன்ற நாடுகளுக்குக் கடத்தப்படுகிறது.

கடந்த புதன்கிழமை இராமநாதபுரம் சுங்க ஆணையாளர் தனசேகரன் தலைமையில் அதிகாரிகள் கீழக்கரை கடலோரப் பகுதியில் ரோந்து சென்றனர். ஒத்த பூவரசு கடலில் 400 க்கும் மேற்பட்ட பலவண்ண சீஅனிமோன் என்ற கடல் தாமரைகள் உயிருடன் சுற்று வலைக்குள் இருந்ததைக் கண்டுபிடித்துக் கைப்பற்றினர். இதை யார் பிடித்து வைத்திருந்தனர் எனத் தெரியவில்லை.

இதுகுறித்து தனசேகரன் கூறியதாவது -

கைப்பற்றிய கடல் தாமரையின் இந்திய மதிப்பு ரூபா இரண்டு லட்சம். இலங்கையில் இதற்கு பல லட்ச ரூபாய் மதிப்புண்டு என்பதால் அங்கு கடத்த பிடித்து வைத்திருக்கலாம். தடை செய்யப்பட்ட இவ்வகைகளைப் பிடித்தால் ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைக்கும். கடல் தாமரை இப்பகுதியில்தான் அதிகம் உள்ளது. இதை யார் பிடித்தனர் என்பது குறித்து விசாரித்து வருகிறோம் எனத் தெரிவித்தார்.

## மெக்காவில் யாத்திரிகர்கள் தங்கியிருந்த கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 70 பேர்பலி!



மெக்கா—

சவுதி அரேபியாவின் புண்ணிய தல நகரமான மெக்காவில் யாத்திரிகர்கள் தங்கியிருந்த விடுதிக்கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 70 யாத்திரிகர்கள் பலியானதுடன், 80க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். மெக்காவில் இந்த முறை ஹஜ் யாத்திரிகர்கள் 25 லட்சம் பேர் கூடுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. லட்சக்கணக்கான மக்கள் ஒரே இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் வந்து குவிவதால் பல்வேறு அசம்பாவிதங்கள் ஏற்படுகின்றன. கடந்த 2003ல் இங்கு சன நெரிசல் காரணமாக 251 பேர் பலியாகினர். இதைவிட அதிகமாக , 1990 ல் ஆயிரத்து 426 பேர் இறந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். இந்த முறை விபத்து எதுவும் நடக்கக்கூடாது என்று சவுதி பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டது. விபத்துக்கள் நடக்காமல் சமாளிக்க 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். எனினும், நேற்று முன்தினம் விடுதி ஒன்று இடிந்து விழுந்து 70 யாத்திரிகர்களைப் பலிவாங்கியது. மெக்கா மசூதியில் இருந்து 50 மீற்றர் தொலைவிலுள்ள இந்த ஒன்பது அடுக்குமாடி விடுதிக் கட்டடத்தில் பல்வேறு நாட்டு யாத்திரிகர்கள் தங்கியிருந்தனர். முதலில் கட்டட உச்சியில் தீவிபத்து ஏற்பட்டது. இதையடுத்து ஏற்பட்ட இடிபாடுகளில் பலர் சிக்கி பலியாகினர்.

இடிபாடுகளில் சிக்கிய பலர் சடலமாகக் கிடந்தனர். மேலும் உயிர்ப்பலி அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. ஹெலிகொப்டர்கள் மூலம் நீர்தெளித்து கட்டடத்தில் ஏற்பட்ட தீ அணைக்கப்பட்டது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தினக்குரல் அலுவலகத்துக்குள் படையினர் நுழைந்து தேடுதல்

யாழ்ப்பாணம்—

யாழ். தினக்குரல் அலுவலகத்தை நேற்றுப் பிற்பகல் முற்றுகையிட்ட இராணுவத்தினர், அங்கு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் காங்கேசன்துறை வீதியில் சிவன் கோவிலுக்கு சமீபமாக இராணுவ காவலரண் மீது வீசப்பட்ட கைக்குண்டு, காவலரணுக்கு முன்பாக விழுந்தபோதிலும் வெடிக்கவில்லை எனத் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து காவலரணுக்கு முன்பாக இருந்த கைக்குண்டைப் படம்பிடிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை இராணுவத்தினர் தாக்கமுற்பட்ட வேளை அவர்கள் தப்பியோடினர்.

அவர்கள் யாழ். தினக்குரல் அலுவலகத்துக்குள் நுழைந்ததாகத் தெரிவித்து அலுவலகத்தை படையினர் முற்றுகையிட்டனர். அங்கு நின்ற ஊடகவியலாளரை புகைப்படம் பிடித்தாகத் தெரிவித்து கைதுசெய்ய முற்பட்டவேளை முகாமையாளர் அந்த நபர் புகைப்படம் பிடிக்கச் செல்லவில்லை எனத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அலுவலகத்தின் செய்திப்பிரிவு, அச்சுப்பிரிவு, நிர்வாகப் பிரிவு, விளம்பரப்பிரிவு ஆகிய பகுதிகளில் கடமையாற்றிய ஊழியர்களை வெளியே நிறுத்திவிட்டு சல்லடை போட்டுத் தேடுதல் நடத்திய பின்னர் படையினர் அங்கிருந்து வெளியேறினர்.

இதேவேளை கைக்குண்டு வீசப்பட்டதை அடுத்து நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. வர்த்தகர்கள், பொதுமக்கள், மாணவர்கள் திசைதெரியாது சிதறியோடினர்.

காங்கேசன்துறை வீதியில் நேற்றுப் பிற்பகலுக்குப் பின்னர் சென்ற அனைத்து வாகனங்களிலிருந்தும் பயணிகள் இறக்கப்பட்டு படையினரால் கடுமையான சோதனைக்குட்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவர் கொலையைக் கண்டித்து மூதூரில் நேற்று ஆர்ப்பாட்டம்!

திருகோணமலை—

திருகோணமலையில் ஐந்து தமிழ் மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து மூதூரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும், மகஜர் கையளிப்பும் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 9 மணிக்கு மூதூர் கணேசபுரம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமான கண்டனப் பேரணி நாவலடிச் சந்தியில் முடிவடைந்தது.

பேரணியில் மூதூர் கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இராணுவ குவிப்பையும், அதன் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாணவர் கொலையையும் கண்டிக்கும் சுலோக அட்டைகள் ஊர்வலத்தில் கலந்து கொண்டோரால் எடுத்துவரப்பட்டன.

திருகோணமலையில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தையும், புதிதாக அமைக்கப்பட்டுள்ள காவலரண்களையும் உடனடியாக அகற்றி, கொலை செய்யப்பட்ட மாணவர்களின் கொலை பற்றிய விசாரணையை பாரபட்சமின்றி நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் மகஜர் ஒன்று அரசாங்க அதிபருக்கு கையளிப்பதற்காக மாணவர் பிரதிநிதிகளால் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப் பட்டது.

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு பிரதேச தமிழ் மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது.

அரச அதிபருக்கு கையளிக்கப்பட்ட மகஜரின் பிரதி தமிழீழ மாணர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடமும் கையளிக்கப்பட்டது. இதேவேளை மூதூர் கிழக்கு பிரதேசம் முழுவதும் நேற்று ஹர்த்தால் நடவடிக்கையால் ஸ்தம்பித்து இருந்தது. (10)

# மட்டக்களப்பிலுள்ள புலிகளை முற்றாக அழித்துவிட முடியுமாம்!

## மார்தட்டுகிறார் பிரிகேடியர் ரத்நாயக்க

பொலனறுவ—

மட்டக்களப்பு முதல் பொலனறுவ வரையான பகுதிகளில் நிலைகொண்டுள்ள 1500 விடுதலைப் புலிகளையும் அழித்துவிடும் சக்தி இராணுவத்துக்கு இருப்பதாக அண்மையில் 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பொறுப்பேற்ற பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

மன்னம்பிட்டி கலாசார நிலையத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விளக்கமளித்த அவர் -

சமாதானம் நிலவிய கடந்த 4 வருட காலத்தில் இராணுவம் நூறு சதவிதம் போர்நிறுத்த உடன்படிக்கையை காத்துள்ளது.

பொலனறுவ - மின்னேரியாவில் இருந்து மட்டக்களப்பு வரையான 149 கிலோமீற்றர் தூரமுள்ள பிரதான பாதையில் பல இடங்களில் குண்டுகளை வைக்க புலிகள் திட்டமிட்ட போதிலும் ஒவ்வொரு முறையும் இராணுவத்தினரின் முயற்சியால் அது முறியடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு, அம்பாறை, வாகரை, பொலனறுவ உட்பட்ட பிரதேசங்களில் 1200 தொடக்கம் 1500 வரையான விடுதலைப்புலி உறுப்பினர்களே உள்ளனர்.

இந்த எண்ணிக்கையானது எமது பெரும் படைபலத்துடன் பார்க்கும் போது மிகச் சொற்பமானதே. தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் அவர்கள் வருவார்களாயின் அந்த அனைத்து விடுதலைப் புலி உறுப்பினர்களையும் அழித்துவிடும் சக்தி இராணுவத்துக்கு உண்டு. புதிய ஜனாதிபதியின் புதிய செயற்திட்டங்களின் கீழ் இராணுவம் உட்பட பாதுகாப்புப் பிரிவுக்கு புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது - புதிய சக்தி கிடைத்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு இது பெரும் சவால். இதனால் அவர்கள் மனோரீதியாக வீழ்ச்சி யடைந்துள்ளனர். அவர்களில் சிலர் கிராமங்களுக்குள் வந்து குழப்பகரமான நிலையை ஏற்படுத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளில் தடங்கல்களை ஏற்படுத்த முயல்கின்றனர்.

நாட்டின் பெயரைக் காப்பாற்ற நாங்கள் தொடர்ந்தும் அதிக பொறுமையுடன் செயற்படுவோம். இந்த நாட்டின் அபிவிருத்திக்கு அனைத்து அரசாங்கங்களுக்கும் யுத்தமே தடங்கலாக இருந்தது. யுத்தத்தைத் தோற்கடித்து சமாதானத்தை நிலைநாட்ட அனைவரும் தமது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும்.

கட்சி பேதங்களை மறந்து அனைவரும் செயற்பட்டால் பாதுகாப்பு அமைச்சுக்கு பெரும் சக்தி கிடைக்கும். அப்போது சமாதானத்தை உருவாக்க முடியும் என பிரிகேடியர் தயா ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.

### தமிழர்...

ந. ரவிராஜ், சுரேஷ் பிரேமச்சந்திரன், மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன ஆகியோர் பங்குபற்றினர்.

## படையினரின் புதிய காவலரண்:

# எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு!

திருகோணமலை—

திருகோணமலை - அன்புவழிபுரம் காந்திநகர்ப் பகுதியில் இராணுவக் காவலரண் அமைக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் மீது ஊர் காவல்படையினரும், விமானப்படையினரும் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

நேற்றுப்பிற்பகல் 2 மணியளவில் காந்திநகர் பகுதியில் திடீரென ஊர் காவல் படையினரும், இராணுவத்தினரும் புதிய காவலரண் அமைத்தனர்.

இதனை அவதானித்த மக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து ஊர்காவல் படையினர் மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் கலைந்து ஓடியவர்களில் 6 ஆண்களை மடக்கிப்பிடித்து கடுமையாகத் தாக்கிய படையினர் - அவர்களை அந்தப் பிரதேசத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள அபயபுரப் பகுதியிலுள்ள மலைப்பாங்கான பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

இதனை அவதானித்த அவர்களின் உறவினர்கள் உடனடியாக இதுகுறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் திருகோணமலை அலுவலகத்தில் முறையிட முயன்றுள்ளனர்.

அன்புவழிபுரத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூடு பற்றி அறிந்து அவ்விடத்துக்கு விரைந்த கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் ஆர்த்தர் குவிற்றன் - நிலைமைகளை அவதானித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த விமானப்படையினரும், இராணுவமும் சராமரியாக தமிழ் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இந்த நிலையில் மற்றுமொரு பாதையூடாக அன்புவழிபுரம் கிராமத்துக்குள் சென்ற கண்காணிப்புக்குழுவினரிடம், படையினர் ஆறு ஆண்களை கைதுசெய்துள்ளமை குறித்து பொது மக்கள் முறையிட்டனர்.

கண்காணிப்புக்குழுத் தலைவர் குறிப்பிட்ட பகுதிக்குச் சென்றபோது படையினர் ஆறு ஆண்களதும் தலையில் துப்பாக்கிகளை வைத்தபடி காணப்பட்டனர். கண்காணிப் புக்குழு வினர் இவர்களை மீட்டு பொது மக்களிடம் ஒப்படைத்தனர். (10)

# நீர்வேலியில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்—

நீர்வேலி - கரந்தன் சந்தியில் வீடொன்றின் மீது நேற்று அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் வீடு சிறிது சேதமடைந்த போதும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களே இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பருத்தித்துறை...

பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதையடுத்து மந்திகை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட சடலம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரியினால் பிரேதபரிசோதனை நடத்தப்பட்டது.

இதன் போது உயிரிழந்தவரின் சடலத்தின் தலையில் 5 வெட்டுக் காயங்களும் கழுத்து, தோள், முதுகுப் பகுதியில் 8 வெட்டுக் காயங்களும் காணப்பட்டதாகவும் அத்துடன் உடலிலும் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் வைத்தியர் மயிலேறும் பெருமாள் தெரிவித்தார்.

இதையடுத்து சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் போடப்பட்டிருந்த வீதியருகே அச்சிடப்பட்ட பிரசுரம் ஒன்று காணப்பட்டதாக கூறப்படுகின்றது. (12)

### தமிழர்கள்...

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் - திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரை நேற்று சென்னையில் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை தமக்குக் கவலை அளிப்பதாகவும், இலங்கையில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களும் உரிமையோடு வாழும் நிரந்தரமான நிலை ஏற்படுவதையே தாம் எதிர்பார்ப்பதாகவும் கருணாநிதி கூறினார்.

தான் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் அடுத்தவாரம் சந்திக்கும்போது இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் அங்கு இடம்பெறும் அர்த்தமற்ற கைதுகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளதாகவும் கருணாநிதி தெரிவித்தார்.

இதேவேளை, சந்திரசேகரன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவையும் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தியாவின் இந்த நிலைப்பாட்டுக்கு தமிழ்நாட்டு தலைவர்கள் தமது அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இதனை வைகோ ஏற்றுக்கொண்டார்.

இந்திய வம்சாவளியினரும் வடக்கு- கிழக்கு தமிழர்களும் ஒன்றிணைந்து செயற்படமுன்வந்தமை குறித்து கருத்து வெளியிட்ட வைகோ- மலையக மக்கள் முன்னணியும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் வட - கிழக்கு கட்சிகளுடன் இணைந்து செயற்ட மேற்கொண்டுள்ள முடிவானது, இலங்கையின் போராட்ட வரலாற்றிலும், மலையக மக்களின் அடிப்படை உரிமை வாழ்க்கையிலும் முக்கிய திருப்பத்தைக் கொண்டு வரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# மட்டக்களப்பில் இளம் பெண் கத்தியால் குத்தி படுகொலை!

மட்டக்களப்பு—

மட்டக்களப்பு - ஊறணியில் இளம் பெண் ஒருவர் கத்தியால் குத்திப் படுகொலை செய்யப்பட்டார். மகேந்திரன் குமுதா (வயது 28) என்ற பெண்ணே படுகொலை செய்யப்பட்டவராவார்.

சின்ன ஊறணி - காளிகோவில் வீதியில் வசித்து வந்த அவர் நீர்ப்பாசன செயலகத்தில் எழுது வினைஞராகப் பணியாற்றி வந்தார்.

மட்டக்களப்பு புதிய எல்லை வீதியிலிருந்து 300 மீற்றர் தொலைவிலுள்ள சின்ன ஊறணி பொலிஸ் சோதனைச் சாவடி அருகே கழுத்தில் கத்தியால் குத்தப்பட்ட காயங்களுடன் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார்.

மட்டக்களப்பு நகரிலிருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் சின்ன ஊறணி உள்ளது. வீதியிலிருந்து 50 மீற்றர் உள்ளே ஒரு புதரில் அவரது சடலம் இருந்தது. சடலத்தின் அருகே இருந்த செல்போன் மற்றும் கத்தியை பொலிஸார் கைப்பற்றினர்.

மகேந்திரன் குமுதா அவரது வீட்டிலிருந்து கடத்திவரப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் இந்தப் படுகொலையை இராணுவத்தினரே செய்திருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# மன்னாரில் கைதான போராளிகளுக்கு ஒரு மாத கால விளக்கமறியல்

கொழும்பு—

மன்னார் - பள்ளிமுனைக் கடற்பரப்பில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட நான்கு கடற்புலிப் போராளிகளையும் 3 மாதம் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிமன்ற நீதிவான் சறோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட உத்தரவுக்கமைய தடுத்துவைக்கப்பட்டிருந்த போராளிகள் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட போராளிகளைத் தடுப்புக்காவலில் வைக்க அனுமதி வழங்குமாறு இரகசியப் பொலிஸ் அதிகாரி சோனி அபேசேகர விடுத்த வேண்டுகோளை ஏற்ற நீதிவான், தொடர்ந்து போராளிகளை தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

ஆறுமுகம் சசிக்குமார், கந்தசாமி பகீரதன், அந்தோனி சத்தியநாதன் மற்றும் சிவஞானம் சிவரஞ்சினி ஆகிய நால்வருமே தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பான மேலதிக விசாரணை அறிக்கையை அடுத்த மாதம் 6 ஆம் திகதி நீதிமன்றில் நால்வரையும் ஆஜர்படுத்தும்போது சமர்ப்பிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

பள்ளிமுனைக் கடற்கரையில் கடந்த டிசெம்பர் 6 ஆம் திகதி கடற்படையினரால் நான்கு போராளிகளும் கைது செய்யப்பட்டருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனிடையே, விடுதலைப் புலி உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் சிவராஜா பிரசன்னா என்பவரை எதிர் வரும் 19 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு இரத்தினபுரி மாவட்ட நீதிபதி என்.வி. கருணாதிலக உத்தரவிட்டார்.

ஹதால்லன அமிதாகொட எனும் இடத்தில் உள்ள வீட்டுக்குவந்தபோது சிங்களவரான வீட்டு உரிமையாளரால் பிடிக்கப்பட்ட இவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

தொடர் விசாரணையின் பின்னர் சந்தேக நபர் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜரபடுத்தப்பட்டார். விசாரணைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய இவர் வாழைச்சேனை - பேசாலை சிவன் கோவில் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

### போரை...

செயல்திறன் மிக்க அதிகாரிகளும், படையினரும் இவர்களை வழிநடத்தும் சிறந்த தலைமைத் துவமும் அவசியம்.

இராணுவ அதிகாரிகள் உயர்மட்டத் தளபதிகளின் உத்தரவுகளை ஏற்று - அவர்களைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

பட்டலந்த இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் சர்மன் குலதுங்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் தயா சந்தகிரி, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னகொட, விமானப் படைத் தளபதிஎயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா உள்ளிட்ட படையதிகாரிகள் கலந்துகொண்டனர்.

11 மாதகாலப் பயிற்சியை முடித்துக்கொண்ட இராணுவத்தைச் சேர்ந்த 30 மேஜர் தர அதிகாரிகளுக்கும், கடற்படையைச் சேர்ந்த ஒரு கொமடோர், 2 லெப். கொமடோர் தர அதிகாரிகளுக்கும், விமானப்படையைச் சேர்ந்த விங் கொமாண்டர் மற்றும் ஸ்குவாட்ரன் லீடர் தர அதி காரிகளுமாக - மொத்தம் 35 பேர் பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### இராணுவத்...

பகுதிக்குச் செல்வதாக இருந்தபோதும் - பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாத காரணத்தால் அந்தப் பயணம் இறுதி நேரத்தில் இரத்துச்செய்யப்பட்டது.

இந்தச் சந்திப்புகளுக்குப் பின்னர் உடனடியாக ஹெலிமூலம் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீண்டும் கொழும்புக்குச் சென்றார்.

### உடுவிலில்...

விட்டு இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சம்பவ இடத்துக்கு நேற்றுக் காலை 8.30 மணியளவில் சென்ற மல்லாகம் நீதிவான் சறோஜினி இளங்கோவன் -மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மானிப்பாய் பொலிஸாரால் சடலம் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு வைத்திய பரிசோதனையின் பின்னர் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.01.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# யாழ்.குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு படையினரிடம் விசாரணை

யாழ்ப்பாணம்

கடந்த டிசெம்பர் மாதத்தில் தமது பிள்ளைகள் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனமை தொடர்பாக பெற்றோர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டதை அடுத்து மனித உரிமை ஆணைக்குழுவினர் - படைத் தரப்புடன் தொடர்பு கொண்டு விசாரணை நடத்தியுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதத்தில் தமது பிள்ளைகள் மற்றும் உறவினர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு, காணாமற்போனது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோர்களால் செய்யப்பட்ட முறைப்பாடுகள் வருமாறு-

முருகதாஸ் நிபருபன் (வயது 19 - கைதடி) - இவர் கடந்த 22 ஆம் திகதியும், பரமநாதன் ஜெயராசா (வயது 27 - உரும்பிராய்) - இவர் கடந்த 23 ஆம் திகதியும், ஜெயபாரட்ணம் பிரசாத் (வயது 19 - துன்னாலை) - இவர் கடந்த 24 ஆம் திகதியும், ஜோசப் சுதாகரன் (வயது 23 - சண்டிலிப்பாய்) - இவர் கடந்த 24 ஆம் திகதியும் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போய் உள்ளதாக பெற்றோர் மற்றும் உறவினரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் அந்தந்தப் பிரதேச இராணுவ பிரிகேடியர்கள், பலாலி இராணுவத் தளபதி ஆகியோருடன் தொடர்பு கொண்டு விசாரணைகளை நடத்தி உள்ளதாகவும் காணாமற் போனோர் தொடர்பாக இராணுவத் தரப்பினர் எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

## குறுகியகால பயிற்சி நெறி ஆரம்பமும் இளைஞர் கொடித்தின நிதி மீளளிப்பும்

யாழ்ப்பாணம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தால் கடந்த புதன் கிழமையன்று ஜனாதிபதி நிதியீட்டத்தின் மூலமான குறுகிய கால தொழில் பயிற்சி நெறிகளின் ஆரம்ப நிகழ்வும், இளைஞர் கொடித்தின மீளளிப்பு வைபவமும் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ் அரச அதிபர் கே.கணேஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்த நிகழ்வில் - யாழ்மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாகாணப் பணிப்பாளர் என். பேரானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது குறுகிய கால தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் அழகுக் கலை மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

## பேரூந்து சேவை சீரின்மையால் சிரமத்துக்குள்ளாகி வரும் மக்கள்

சுதுமலை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை பேரூந்து நிலையத்தில் இருந்து தும்பளை ஊடாக அம்பனுக்கான போக்குவரத்து சீராக இடம்பெறாமையால், மக்கள் நாளாந்தம் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். கடந்த வாரம் பருத்தித்துறை முதலாம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலுக்குப் பின்னர் -மாலை நேரப்பேரூந்துப் போக்குவரத்து நடைபெறுவதிலையென கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

762 ஆம் இலக்கப் பயணப் பாதையில் தும்பளை ஊடாக அம்பனுக்கு தினமும் காலை 9 மணிக்கும், மாலை 3 மணிக்குமே பேரூந்துச் சேவை இடம்பெற்று வந்தது.

கடந்த ஒருவார காலமாக மாலை நேரப் பேரூந்து சேவை இடம் பெறாமையால், தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், வழமையான போக்குவரத்தை ஏற்படுத்தி தருமாறும் பிரதேச செயலர் ஊடாக அரசாங்க அதிபரை கேட்டுகொண்டதாகவும் பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். (91)

## மாற்று வலுவுடையோர்களுக்கிடையிலான ஆற்றலை வெளிக்கொணரும் போட்டிகள்!

சுதுமலை

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு மாற்று வலுவுடையோர்களுக்கிடையே பல்வேறு போட்டிகள் இந்த மாத இறுதியில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாற்றுவலுவுடையோரிடம் இருந்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டி, இருசக்கர வண்டிகளின் ஓட்டப்போட்டி, மாலை கட்டுதல், கோலம் போடுதல், கட்டுரை, கவிதை, சங்கீதம், சித்திரம், கதிரை பின்னல், சிகை அலங்காரம், தையல், விநோத உடை, திருக்குறள்மனனம், மேலைத்தேச நடனம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம், இல-100 ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (91)

## பொலிஸ் நிலையம் மீது சங்கானையில் கிரனேட் வீச்சு!

யாழ்ப்பாணம்

சங்கானைப் பொலிஸ் நிலையம் மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்முன்தினம் இரவு 7 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் இரண்டு கைக்குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்திய போதிலும் எவருக்கும் எவ்வித சேதமும் ஏற்படவில்லையென மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து அந்தப் பகுதியில் சுற்றி வளைப்புத் தேடுதல் நடத்தினர்.

## தென்மராட்சி பகுதியில் அதிகரித்துவரும் சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கை

சாவகச்சேரி

அண்மைக்கால அசாதாரண சூழலைப் பயன்படுத்தும் பல சமூக விரோதிகள் மிக அதிகமான அளவில் மணல் திருட்டில் ஈடபட்டு வருகின்றனர். கோயிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் உரிமையாளர்கள் இல்லாத காணிகளிலிருந்து திருடப்படும் மணல் நாளாந்தம் பதினைந்துக்கும் மேற்பட்ட லொறிகளில் யாழ்.நகர்நோக்கி எடுத்துவரப்படுவதையிட்டு இந்தக் கிராம மக்கள் ஆத்திரம் கொண்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மணல் அகழ்வதைத் தடுப்பதற்குரிய ஏற்பாடுகள் பிரதேச செயலகங்களூடாக எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் -ஜே.296, ஜே.297 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் இருந்து பகல் பொழுதுகளிலேயே பரவலாக நடைபெறும் மணல் திருட்டைத் தடுக்க கிராம சேவகர்கள் கூட நடவடிக்கை எடுக்காதிருப்பதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த சட்டவிரோத மண் திருட்டால் தமது கிராமங்களுக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்களில் இருந்து தமது கிராமத்தைக் காப்பாற்ற சூழல் பாதுகாப்புக்காக செயற்படும் அனைத்து அமைப்புக்களும் விரைந்து முன்வரவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொள்கின்றனர். (31)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : சி.யாழிசை
முகவரி : புதுக்குடியிருப்பு

அகவை ஒன்று



பெயர் : கி.துவாஜினி
முகவரி : புதுக்குடியிருப்பு

அகவை இரண்டு



பெயர் : கே.மதன்
முகவரி : கோப்பாய்

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------
முகவரி : ----------
பிறந்த ஆண்டு : ----------
கூப்பனுடன் படமும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
----------
பெற்றோர் ஒப்பம்

## இப்படியும் நடக்கிறது...!

வடமராட்சி

பருத்தித்துறை கற்கோவளம் கிராம மக்களுக்கு கற்கோவளம் இராணுவ முகாமில் வைத்து துவிச்சக்கர வண்டிகளும், உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கற்கோவளம் ஜே-406 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு 20 துவிச்சக்கர வண்டிகள் கடந்த வாரம் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை தலா 1500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

வீதிகளில் மட்டுமன்றி, வீடுகளில் கூட சுதந்திரமாக இருக்கும் முடியாத இன்றைய நிலையில் - படையினர் மக்களுடன் நல்லுறவை பேணுவதாக வெளியுலகுக்கு காட்டிக் கொள்வதற்காகவே மேற்படி பொருட்கள் வழங்கப்படுவதாக கிராம மக்கள் குறிப்பிடுகின்றனர்.

படையினரின் அடாவடித் தனங்களுக்கு எதிராக மக்கள் கொதித்துக் கொண்டிருக்கையில், அசாதாரண சூழலில் கிராமத்திலுள்ள குறிப்பிட்ட சிலரின் கௌரவக்குறைவான செயற்பாடுகளினால் முழுக்கிராம மக்களும் பாதிக்கப்படுவதாக படையினரின் மேற்படி செயற்பாட்டை எதிர்க்கும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

## கலைப்பேரரசு ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்

அமரர் கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை ஞாபகார்த்த நிதியத்தின் விருது வழங்கும் நிகழ்வு நாளை பிற்பகல் 3மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டுக்கான ஏ.ரி.பொன்னுத்துரை விருதுரை கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரைக்கு வழங்கப்படவுள்ளது.

எழுத்தாளர் செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஏ.ரி.பொன்னுத்துரையின் இலக்கிய பணி தொடர்பாக யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிறுவனப் பணிப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், எழுத்தாளர் -கிருபானந்தா ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், பாதுகாவலன் பத்திரிகை பிரதம ஆசிரியர் அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (91)

வடமராட்சிப் பகுதிகளில்

## பேரூந்து தரிப்பிடங்களில் அச்சத்துடன் நிற்கும் மக்கள்

வடமராட்சி

வடமராட்சிப் பிரதேசத்தில் இராணுவ நெருக்கடிகள் காரணமாக பேரூந்துத் தரிப்பிடங்களில் பயணத்திற்காக நிற்கும் பொதுமக்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பருத்தித்துறை, மந்திகை, நெல்லியடி ஆகிய இடங்களிலுள்ள பேரூந்து தரிப்பிடங்களுக்குள் இராணுவத்தினர் நிற்பதாலும், மந்திகை, கிராமக்கோடு மற்றும் 1ம்கட்டை ஆகிய இடங்களில் பொதுமக்கள் பேரூந்துகளின் வருகைக்காக காத்து நிற்கும் இடங்களில் இராணுவக் காவலரண்களும், முகாம்களும் ஏனைய ஆயுதக்குழுக்களின் முகாம்களும் அமைந்திருப்பதோடு இராணுவத்தினர் காவல் கடமைகளிலும் ஈடுபட்டிருப்பதால் அவ்விடங்களில் பேரூந்துகளுக்காக காத்து நிற்பதில் பொதுமக்கள் அச்சமடைந்து வருகின்றனர்.

இதேவேளை, இவ்விடங்களில் பயணநோக்கத்துக்காக நிற்கும் இளைஞர்களை இராணுவத்தினர் அழைத்து விசாரணைக்களுக்கு உட்படுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## பாதிக்கப்படும் மக்களின் முறைப்பாடுகளை வெளிப்படுத்த குழுக்கள் அமைக்க தீர்மானம்

யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் பாதிக்கப்படும் சாதாரண மக்களின் முறைப்பாடுகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புக்களின்றி அவதிப்படுவோரின் அவலநிலைகருதி, சமயத் தலைவர்கள் முன்னின்று மக்கள் மத்தியிலிருந்து சமூக நலன்விரும்பிகளை இணைத்து ஆங்காங்கே குழுக்களை அமைத்துச் செயற்பட எண்ணியுள்ளனர்.

இந்தக் குழுக்களை அமைப்பதற்கான முயற்சியை மேற்கொள்வதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று வடமராட்சி பிரதேசத்தில் கரவெட்டிப் பிரதேச பங்குத்தந்தை ஆனந்தகுமார் அடிகள் தலைமையில் கூடியது.

இக்கலந்துரையாடலுக்கு இந்துக் குருக்கள், கிறிஸ்தவ பாதிரியார் கரவெட்டி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளிலிருந்தும் ஒவ்வொரு சமூகப் பெரியார்கள் சமுகளித்திருந்தனர்.

போர்க்கால சூழ்நிலையில் பிரஜைகள் குழுக்கள் இயங்கி மக்களின் குறைபாடுகளை உரியவர்களிடம் தெரியப்படுத்தி நிவாரணம் தேடமுயற்சித்தது போன்று இக்குழுக்களும் இயங்க வேண்டிய அவசியத்தைப் பலரும் வலியுறுத்தினர்.

மேலும், இந்தக் குழு சுதந்திரமான முறையில் இன, மத வேறுபாடற்ற பொது அமைப்பாக அரசியலுக்கப்பால் தன் பணியைத்தொடரவேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. வெகுவிரைவில் அடுத்த கூட்டம் கூட்டுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. (13)

## மானிப்பாயில் பஸ்தரிப்பு நிலையம் அமைக்க ஏற்பாடு

மானிப்பாய்

மானிப்பாய் பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட பயணிகளின் நன்மை கருதி நான்கு பஸ்தரிப்பு நிலையங்களை அமைத்துக் கொடுப்பதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை முன்வந்துள்ளது.

இதற்கான அனுமதிகோரி போக்குவரத்துச்சபை- வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

மானிப்பாய் பிரதேசப் பகுதியில் பஸ்தரிப்பு நிலையங்கள் இல்லாததால் மாணவர்களுக்கும்,பயணிகளுக்கும் ஏற்படுகின்ற சிரமங்கள்பற்றி வலி.தென்மேற்கு பிரதேச சபைச் செயலாளர் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அதிகாரிக்குத் தெரிவித்ததையடுத்தே தேவையான இடங்களில் பஸ்தரிப்பு நிலையங்களை அமைக்க போக்குவரத்துச்சபை முன்வந்துள்ளது.

திருமலையில்

# பூரண கதவடைப்பைத் தொடர பொங்குதமிழ் சமூகம் அறைகூவல்

திருகோணமலை —

திருமலையில் அப்பாவி மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் வடக்கு - கிழக்கின் பல பகுதிகளிலும் மக்களைத் துயரத்தில் ஆழ்த்தியுள்ளதுடன், அவர்களிடையே ஒரு கொந்தளிப்பு நிலையையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரும் படையினரின் அடாவடித்தனங்களை கண்டித்தும், எதிர்ப்புத் தெரிவித்தும்- நேற்று முன்தினம் மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்குட்பட்ட பல பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதுடன், மக்களின் இயல்பு வாழ்வும் முற்றாகப் பாதிக்கப்பட்டது.

இதேவேளை இந்தப் படுகொலைச் சம்பவங்களைக் கண்டிக்கும் முகமாக நேற்றைய தினம் முதல் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு பொங்குதமிழ் சமூகம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

இவ்வறிக்கையில்-திருமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகர சபைக் கடற்கரையை அண்டிய காந்திசிலைக்கு முன்னால் நின்ற மாணவர்களை- இலங்கை அரச படைகளும், பேரினவாத காடையர்களும் ஒன்றிணைந்து நடத்திய அதிகாரச் செயல் மூலம் வாழும் குருத்துக்களான ஐந்து மாணவச் செல்வங்களுக்கு இறுதி மரியாதை செலுத்தக்கூடப் படையினர் அச்சுறுத்தல் விடுவதுடன், துக்கதினத்துக்காகக் கட்டப்பட்ட கறுப்புக் கொடிகள், பதாதைகளையும் அறுத்தெறிந்துள்ளனர். இந்தநிலை தொடருமானால் எமது வாழ்வு கேள்விக்குறியாகிவிடும்.

இந்தநிலையில் அத்துமீறிக் குவிக்கப்பட்டுள்ள அரச படைகளை அகற்றுமாறு கோரி, அரசுக்கு விடுத்த வேண்டுகோள்கள் எதுவும் கணக்கிலெடுக்கப்படாததால், அரச நிர்வாகத்தைப் பூரணமாக ஸ்தம்பிதமடையச் செய்வதற்காகவும், அதன் மூலம் எமது அவல நிலையை உணர வைப்பதற்காகவுமே பூரண கதவடைப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீர்த்தாங்கி வேலைகளை உடன் பூர்த்தி செய்யுமாறு கோரிக்கை!

கிளிநொச்சி —

2005 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி மூலம் நீர் வழங்கும் செயற்பாடு அண்ணளவாக ஒரு வருட காலமாகியும், இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. இதனால் மல்லாவிப் பிரதேச மக்கள் கவலையடைந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் குடிநீர்ப் பிரச்சினை உருவானதைக் கருத்தில் கொண்டே மேற்படி நீர்த்தாங்கி அமைக்கப்பட்டதாகவும், இது அமைத்தலுக்கு ஏற்படும் தாமதம் பற்றி மக்கள் அமைப்புக்கள் உரிய தரப்பினருக்குப் பலதடவை எடுத்துக்கூறியும், இப்பிரச்சினை பூர்த்தி செய்யப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது. இதனால் மக்கள் வரட்சியான காலப் பகுதியில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தில் அதிக அக்கறை கொண்டு செயற்படுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் வைகுண்ட ஏகாதசி தினப்பெருவிழா

வட்டக்கச்சி —

வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா - எதிர்வரும் 10.01.2006 செவ்வாய்க்கிழமை காலை 7 மணி தொடக்கம் மறுநாள் 6 மணிவரை சிறப்பாக நடைபெறவுள்ளது.

அன்றைய நிகழ்வுகளாக ஸ்ரீமத் பகவத்கீதை முற்றோதல், பகல் விசேட அபிஷேக ஆராதனைகள், ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாசுர முற்றோதலுடன் இரவு நான்கு சாமப் பூசைகளும், அரங்கநாதப் பெருமாளுக்கு விசேட அபிஷேகங்களும், வைகுண்ட வாசல் திறக்கும் வைபவமும், அதனைத் தொடர்ந்து இறந்த முன்னோர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெறும்.

இரவு பூசை தவிர்ந்த நேரங்களில் நாமஜெபம், சமயச் சொற்பொழிவு போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

தற்சமயம் தமிழ் மாதம் மார்கழி முழுவதும் அதிகாலை திருப்பாவை உற்சவம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இந்த உற்சவம் 13/01/06 அன்று தைப் பொங்கலுக்கு முதல் நாள் காலை சித்தாமிர்த தீர்த்தத்தில் தீர்த்த உற்சவத்துடன் இனிது நிறைவேறுகிறது. தைப்பொங்கல் விசேட உற்சவம் மறுநாள் பட்டிப்பொங்கல், விசேட பொங்கல் வழிபாடுகளுடன் இனிது நிறைவேறவுள்ளது. பட்டிப் பொங்கல் அன்று கோமாதாவுக்கு சிறப்பு பூசை வழிபாடுகளுடன், கோகுலக்கண்ணன் வீதி வலம் வரும் அருட்காட்சியும் இடம்பெறவுள்ளது.

# நன்னீர் மீன்களுக்கு கிராக்கி எனினும் உற்பத்தியில் வீழ்ச்சி

மட்டக்களப்பு —

சுனாமித் தாக்கத்தை அடுத்து, மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தி வீழ்ச்சி அடைந்திருப்பதாக மாவட்ட கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே.செல்வராஜா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்தில் நன்னீர் மீன்களுக்குப் பெரும் மதிப்பு ஏற்பட்டுள்ளது. எனினும், உற்பத்தி செய்யப்படும் மீன்களின் தொகை மிகவும் குறைவாக உள்ளன. இதன் காரணமாக மாவட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள ஆறாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

சுனாமி தாக்கக் கழிவுகள்- ஆறுகளிலிருந்து அகற்றப்பட்டபோதும், மீனவர்கள் தொடர்ந்தும் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுதல் குறைவ்டைந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் - களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி, ஏறாவூர், காத்தான்குடி, வாழைச்சேனை உள்ளிட்ட பல பகுதிகளிலும் சுமார் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடும்பஸ்தர் திடீர் மரணம்

கிளிநொச்சி —

இராமநாதபுரம் பழைய கண்டி வீதியில் வயோதிபர் ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

புதுவருடத்திற்கு வீட்டுக்குத் தேவையான பொருட்களை வட்டக்கச்சி சந்தையில் கொள்வனவு செய்து கொண்டு வீடு திரும்பியவேளை, வீதியில் திடீரென மாரடைப்பு ஏற்பட்டு நாகலிங்கம் பாலசிங்கம்(வயது 55)என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையார் உயிரிழந்துள்ளார். இவரின் இறப்புப் பற்றி வட்டக்கச்சி காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்றது. (09)

# பூநகரி கால்நடை வளர்ப்பு கூட்டுறவுச்சங்கம் மீள ஆரம்பம்

(09)

கிளிநொச்சி —

கிளிநொச்சி - பூநகரிப் பிரதேசத்தில் வாடியடி பகுதியில் 1990 ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்த பூநகரி கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் 1991 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் வலம்புரி இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்காது காணப்பட்டது. பூநகரி மக்கள் மீளக் குடியமர்ந்து பிரசித்தி பெற்ற பின்னர், 2005 ஆம் ஆண்டு மீளவும் பூநகரி கால்நடை வைத்தியசாலைக்கு அண்மையில் இயங்க ஆரம்பித்தது.

மேற்படி சங்கமானது -கால்நடை வளர்ப்புத் தீவனங்கள், கால்நடை சிகிச்சை மருந்துகள் போன்றவற்றை விற்பனை செய்து கால்நடை வளர்ப்போர் எதிர்நோக்கி வந்த இடர்களை நீக்கியுள்ளதாக, பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

# திருவடிநிலைய முதியோர் இல்ல சுகாதார பயிற்சிப் பட்டறை

வன்னேரிக்குளம் —

யோகர் சுவாமிகள் திருவடி நிலையம் நடத்தும் முதியோர் இல்ல பயனாளிகள் ஊழியர்களுக்கான சுகாதாரப்பயிற்சி பட்டறை -கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் திரு.ரி.சத்திய மூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதியோர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டு, அனைவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், மருத்துவ சுகாதார ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

இதில் உரையாற்றிய வைத்தியக் கலாநிதி ரி.சத்திய மூர்த்தி அவர்கள் கூறுகையில் -

இந்த இல்லத்தில் மரக்கறி உணவுகள் வழங்கப்படுகிறது.

அதாவது சைவ உணவுகள் வழங்குவதன் நோக்கம் யோக சுவாமிகள் நிலையம் ஒரு ஆன்மீக அமைப்பு என்பதனாலேயே. எனினும் முதியவர்கள் சைவ உணவு உட்கொள்வது தான் பொருத்தமானதாகும் என்றார்.

இதேவேளை வைத்திய கலாநிதி சிவதாசன் - முதியோரைப் பரிசோதித்து ஆலோசனையும் வழங்கினார்.

முதியோர் இல்லத் தலைவர் பொன் நித்தியானந்தனின் வரவேற்புரையுடன் ஆரம்பமான நிகழ்வுகள் மதிய போசனத்துடனும், முதியோர் இல்லச் செயலாளர் டொக்டர் ச.முருகானந்தன் அவர்களின் நன்றியுரையுடனும் நிறைவுபெற்றது.

# விபத்தில் ஒருவர் படுகாயம்!

வட்டக்கச்சி —

வட்டக்கச்சி ஹட்சன் வீதிச் சந்திக்கருகாமையில் முன்னால் வந்த ஹைஏஸ் வானை விலத்திச் செல்ல முற்பட்ட உந்துருளியில் பயணித்த ஹட்சன் வீதி குறக்கட்டைச் சேர்ந்த ஆறுமுகம் சுபாஸ்கரன் (வயது28) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில், வட்டக்கச்சி மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டார். மேற்படி சம்பவம் கடந்த புதன்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

# மண்டபமின்றி அவதியுறும் ஆலங்கேணி கிராம மக்கள்!

பூநகரி —

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி - ஆலங்கேணி மக்கள் பொது மண்டப வசதியின்றி அவதிப்படுகின்ற நிலை காணப்படுகிறது.

இந்தக் கிராம மக்கள் தாம் பொது விடயங்களையும், கிராம மட்டக் கருத்துகளையும் நடத்துவதற்கும் பொது மண்டப வசதி இன்றி அவதியுறும் நிலை ஏற்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேசத்தில் எல்லாக் கிராமங்களிலும் பொது மண்டபம் அமைக்கப்பட்டுள் ளது.

ஆனால், இந்தக் கிராமத்தில் பல நிறுவனங்கள் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட போதும் - எந்த நிறுவனமும் பொது மண்டபத்தை அமைத்துக் கொடுக்காததால் மேற்குறிப்பிட்ட நிலை காணப்படுகிறது.

இது தொடர்பாக மக்கள் பல தடவை உரிய தரப்பினருக்கு எடுத்துக்கூறியும், இதுவரை இதற்கான நடைமுறைகள் எதுவும் இல்லை எனவும் மக்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

எனவே, உரியவர்கள் இந்த விடயத்தில் அக்கறை கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஸ்கந்தபுரத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

கிளிநொச்சி —

கிளிநொச்சி மாவட்டத்தில் ஸ்கந்தபுரம் கிராமத்தில் நீர்ப்பாசனம், மின்சாரம், வீதி அபிவிருத்தி போன்ற திட்டங்கள் இவ்வருடம் முன்னெடுக்கப்படவுள்ளன.

அண்மையில் கரைச்சி பிரதேச சபையில் ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்திச்சங்க புதிய நிர்வாக சபைத் தெரிவில் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பல வருடங்களாக செயற்படாமல் இருந்து, தற்பொழுது புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவின் பின்னர் இயங்க ஆரம்பித்துள்ள ஸ்கந்தபுரம் கிராம அபிவிருத்தி சங்கம் எதிர்காலத்தில் சிறப்பாக செயற்பட்டு கிராம அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் எனவும் நிகழ்வில் கலந்துகொண்டோரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய நிர்வாக சபையின் தலைவராக க.பரமேஸ்வரனும், செயலாளராக இ.ஜெயபிரகாஸூம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# புதிய ஆண்டுக்கான வாகன உரிமம் வழங்கல்

கிளிநொச்சி —

இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கான வருடாந்த வாகன உரிமம்-கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தால் வழங்கப்பட்டு வந்தது. 01.01.2006 முதல் வாகனங்களுக்கான வருடாந்த வாகன உரிமம் வழங்கும் செயற்பாடு பிரதேச செயலகங்களுக்குப் பரவலாக்கப்பட்டுள்ளது. எனவே, வாகன உரிமையாளர்கள் 2006 ஆம் ஆண்டு முதல் - கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்களூடாகத்தங்களது வருடாந்த வாகன உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட செயலாளர் அறிவித்துள்ளார்.

அத்துடன், பின்வரும் ஆவணங்களை வருடாந்த வாகன உரிமம் பெறுவதற்காகச் சமர்ப்பிக்கும் படி கோரப்பட்டுள்ளது.

வாகனப்பதிவுப்புத்தகம் (மூலப்பிரதி), காப்புறுதிச் சான்றிதழ்(வலுவிலுள்ளது), இறுதியாகப்பெற்ற வாகன வருடாந்த உரிமம், தேசிய அடையாள அட்டை, உரிய கட்டணம்.

# சித்தங்குறிச்சி கிராமத்தில் கால்நடை வளர்ப்பு பயிற்சி

பூநகரி —

கிளிநொச்சி மாவட்ட பூநகரி - சித்தங்குறிச்சி கிராமத்தில் கால்நடை வளர்ப்புப் பயிற்சி நடைபெற்றது.

மேற்படி பயிற்சியானது 05.01.2006 காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகியது. இந்தப் பயிற்சிக்கு நியாப் திட்ட சமூக வலுவூட்டாளர் சரோன் தலைமை தாங்கினார். தொடர்ந்து கிராம சேவையாளர் த. சிவலிங்கம் சிறப்புரையினை நிகழ்த்தினார்.

கால்நடை வளர்ப்பு, கால்நடை வைத்தியம் என்பன தொடர்பாக வீடியோ படக்காட்சி மூலம் கருத்துரையினையும், விளக்க உரையினையும் பூநகரி கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சூரியகுமாரன் நிகழ்த்தினார்.

சுமார் மூன்று மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்தப் பயிற்சி வகுப்பில் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 75 பயனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.